திருவள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி - மார்கழி
டிசம்பர் 2020 - ஜனவரி 2021

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

ரூ. 8.00



28-4-2020 அன்று திருமடத்தின் சார்பில் அரிசி மற்றும் 11 வகையான மளிகைப் பொருட்களை மாவட்ட ஆட்சியர் திருமிகு ஜெ. ஜெயகாந்தன் அவர்கள் முன்னிலையில் வழங்கிய நிகழ்வு

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



2-4-2020 அன்று கொரோனா நிவாரணநிதி
6 லட்ச ரூபாய்க்கான வரைவோலை மாவட்ட ஆட்சித்தலைவர்
திருமிகு. ஜெ. ஜெயகாந்தன் இ.ஆ.ப. அவர்களிடம் வழங்கிய நிகழ்வு





திருவாரூர் மாவட்டம் கொறுக்கை தொடக்கப் பள்ளி
வகுப்பறை கட்டிடங்களில் திறப்பு விழாவிற்கு முன்பே
நிவார் புயலால் பாதிக்கப்பட்ட கிராமத்தார் தங்குதல்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2051	மாதம் : பங்குனி – மார்கழி
மலர் : 34	இதழ் : 3 – 11

ஒளிமயமான எதிர்காலம் உருவாகட்டும்!

கோவிட்-19 உலகத்தை உலுக்கிப் போட்டு விட்டது. பம்பரமாய்ச் சுழன்று பரபரப்பாய் இயங்கிய உலகம் பாதுகாப்பு வளையத்துக்குள் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டது. ஏறத்தாழ ஒன்பது மாதங்களைக் கடந்து நம் வாழ்க்கை மாற்றுப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

அரசியல், ஆன்மீகம் என மக்கள் பொது நிகழ்வுகளில், குடும்ப நிகழ்வுகளில் கூடுவது தவிர்க்கப்பட்டு வருகின்றது. கொரானா என்ற கொடுந்துயரிலிருந்து மீள மனிதகுலம் தொடர்ந்து போராடி வருகின்றது. பேரிடர்க் காலங்களில் இதயம் சுரக்கும் இரக்கம் இப்பொழுதும் நம்மை ஆறுதல் கொள்ளச் செய்திருக்கின்றது.

மதுரையில் சலூன் கடை நடத்தும் மோகன் என்பவரின் மகள் நேத்ரா என்ற மாணவி தன் மேற்படிப்பிற்காகத் தன் தந்தை சேமித்த பணத்தை தம் பகுதி ஏழை மக்களுக்கு உதவி செய்ய காரணமாய் இருந்ததை நினைத்து நாம் பெருமைப் படுகின்றோம்.

எத்தனை எத்தனை மகத்தான மனிதர்களை கொரானா விழுங்கி விட்டது. தற்பொழுதைய சூழலில் கொரானா தொற்று பரவாமல் கட்டுக்குள் அடங்கி வருவது ஆறுதலைத் தருகின்றது.

கொரானாவைக் கட்டுப்படுத்தும் மத்திய மாநில அரசுகளின் போர்க்கால நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன.

ஒவ்வொரு பேரிடர்க் காலத்திலும் மக்களின் மனிதநேயம் வெளிப்படுவதும், ஆறுதல், அரவணைப்புக் கரங்களை நீட்டுவதும் நமக்கு ஆறுதலைத் தருகின்றது.

கொரானா பேரிடர்க் காலத்தில் நம் ஆதீனம் மற்றும் கல்வி நிறுவனங்கள் சார்பாக மாண்புமிகு பிரதமர் கொரானா நிவாரணத்திற்கு ரூ. 3 இலட்சமும், மாநில அரசு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரணத்திற்கு ரூ. 3 இலட்சமும் அளித்து உதவினோம். இதில் "அன்பே தவம்" தொடர் மூலம் நமக்குக் கிடைத்த ராயல்டி தொகை ஒரு லட்சத்தை கொரானா நிவாரண நிதிக்கு வழங்கி விட்டோம். இது தவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ரூ. 700/- மதிப்புள்ள அரிசி மற்றும் அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் குன்றக்குடியைச் சார்ந்த கிராம மக்கள் 1200 குடும்பங்களுக்கும், ஆதீனம் மற்றும் ஐந்து திருக்கோயில்களின் பணியாளர்கள் 300 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்பதற்கேற்ப தினந்தோறும் 100 பேருக்கு மதிய உணவு 2 மாதம் வரை வழங்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய, அவசரகாலப் பணியாளர்கள், காவல்துறை, மருத்துவமனை ஊழியர்களுக்கும் தினந்தோறும் மதிய உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தி பெற ஒ.சிறுவயல் மருத்துவர் சொக்கலிங்கம் அவர்களின் மூலிகை கஷாயத்தை குன்றக்குடி கிராம மக்கள் அனைவருக்கும் 2 நாட்கள் வழங்கினோம். தினந்தோறும் திருமடத்தில் சுமார் 50 பேருக்கு கடந்த மார்ச் மாதம் முதல் ஆறு மாதங்களாக மூலிகைக் கஷாயம் வழங்கினோம்.

இன்று வளர்ந்த உலக நாடுகள் கொரானா வைரஸுக்கான தடுப்பூசி கண்டுபிடிக்க மிகத் தீவிரமாக முயற்சித்து

பரிசோதனையிலும் இறங்கியுள்ளன. எத்தனை பேர் வாழ்க்கையை கொரானா புரட்டிப் போட்டுள்ளது!

அன்றாட உடல் உழைப்புத் தொழிலாளர்கள், பெரிய வர்த்தக நிறுவனங்கள், அவற்றின் பணியாளர்கள் என சாதி, சமய வேறுபாடு இல்லாமல் உலகம் முழுவதும் அனைவரின் பொருளாதாரத்தின் மீதும், வாழ்க்கையின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளது.

மகாராஷ்டிரா தலைநகர் மும்பையைச் சேர்ந்தவர் அக்ஷய் பார்க்கர். அங்குள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் தலைமை சமையல்காரராகப் பணிபுரிந்து வந்தார். மாதந்தோறும் லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கி வந்தார். கொரானா வைரஸ் பரவலைத் தடுக்க அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு காரணமாக அவர் பணிபுரிந்து வந்த நட்சத்திர ஓட்டல் கடும் நஷ்டத்தை சந்தித்தது. அதன் காரணமாக நட்சத்திர ஓட்டலின் தலைமைச் சமையல்காரர் அக்ஷய் பார்க்கர் வேலை இழந்தார்.

வேலை இழந்த அக்ஷய் பார்க்கர் சாதாரண ஓட்டல் முதல் ஐந்து நட்சத்திர ஓட்டல் வரை பல இடங்களில் வேலை தேடி அலைந்தார். வேலை கிடைக்கவில்லை. ஏமாற்றமே மிச்சம். கடைசியில் சமையல் செய்யும் தொழில் தன் தொழிலாக இருக்கின்றது. இனி இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற துணிச்சலோடு தனது கைவசம் இருந்த சொற்பப் பணத்தில் ஒரு சிறிய ஓட்டல் தொடங்கினார். "அக்ஷய் பார்க்கர் ஹவுஸ்" எனும் அந்த சிறிய ஓட்டலில் முதலில் மந்தமாகவே வியாபாரம் நடந்தது.

நாட்கள் செல்லச் செல்ல உணவின் தரம் ஐந்து நட்சத்திர ஓட்டல் தகுதியுடன் கூடியது என்பதை மக்கள் உணர்ந்து வியாபாரம் விறுவிறுப்பாக நடந்தது. நாள் ஒன்றுக்கு 5000 முதல் 10000 வரை லாபம் ஈட்டுகின்ற அளவிற்கு வியாபாரம் உயர்ந்தது.

இப்படி கொரானா போராட்டத்தை வெற்றி காண எதிர்கொண்ட அக்ஷய் பார்க்கர் போல் எத்தனையோ மனிதர்கள் சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதோ புதிய ஆண்டு மலர இருக்கின்றது. நம்பிக்கையோடு புதிய ஆண்டை எதிர்கொண்டு வரவேற்போம்.

கடந்த ஆண்டு கொரானா ஆண்டாக கடந்து போய் விட்டது. உலகத்தின் ஒட்டுமொத்த மனிதகுலத்தின் இயல்பு வாழ்வே முடங்கிப் போய்விட்டது. நவம்பர் - டிசம்பர் மாதங்களிலே புயலின் தாக்குதல் சென்னை, கடலூர், சிதம்பரம் உள்ளிட்ட தமிழகத்தின் சில மாவட்டங்களில் வெள்ளச்சேதம்.

கஜா புயல் தாக்குதலினால் சேதமுற்ற திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் நமது கொறுக்கை கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் உதவி நடுநிலைப்பள்ளியில் ஐந்து வகுப்பறைகள் புதிதாக கட்டியிருப்பதில் திறப்பு விழா நடத்துவதற்கு முன்பே புதிய ஐந்து வகுப்பறைகளையும் சமீபத்தில் ஏற்பட்ட நிவர் புயல் பெருமழையில் பாதிப்புக்குள்ளான கொறுக்கை கிராமத்தார்கள் தங்குவதற்காக அனுமதி அளித்து உரிய உதவிகளையும் செய்துள்ளோம்.

நமது பள்ளித் தலைமையாசிரியர் பள்ளிக்கூடம் திறந்து புதிய வகுப்பறைகளை திறப்புவிழா நடத்தாமல் பொதுமக்களை தங்க அனுமதிக்கலாமா என நம்மிடம் கேட்டபொழுது, கடந்த ஆண்டு ஏற்பட்ட கஜா புயலில் சேதமுற்ற நமது பள்ளிக்கூட வளாகத்தில் புதிய வகுப்பறைகள் கட்டிய பின்பு சமீபத்தில் ஏற்பட்ட நிவர் புயலின் பெருமழையால் பாதிப்புக்குள்ளான பொதுமக்கள் தங்குவதற்கு வகுப்பறைகள் திறப்புவிழா காணாமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து தங்க வைப்பதுதான் உண்மையான திறப்பு விழா என்று தெரிவித்து புயலின் பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாக்க நாம் அனுமதியளித்தோம்.

நீர் வரத்துக் கால்களைப் பேணிப் பாதுகாத்து பராமரிக்காத குறையை ஒவ்வொரு மழை வெள்ளத்தின் போதும் உணர்கிறோம். விளைநிலங்கள் வீட்டடி மனைகளாகவும், கண்மாய்கள், குளங்கள், ஏரிகள் காணாமல் போய் காங்கிரீட் குடியிருப்புகளாகவும் உருவாகியுள்ளன.

மரங்கள் நடுவோம். மழை பெறுவோம்.

ஆறுகளில் மணல் அள்ளுவதைத் தடுப்போம். .

நதி நீரைப் பாதுகாப்போம். இயற்கை சார்ந்து வாழ்வோம்.

உணவே மருந்து என்று இருந்த வாழ்க்கை மலர வேண்டும்.

சுக்கு, மஞ்சள், மிளகு,. சீரகம் முதலிய பொருட்களை அன்றாடம் நமது உணவில் இடம் பெறச் செய்வோம்.

முகக் கவசம் அணிவோம். சமூக இடைவெளியைக் கடைபிடிப்போம்.

நோயற்ற வாழ்வு வாழ வழி காண்போம்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை......"

என்று அப்பர் பெருமான் பாடினார். அந்தத் தன்னம்பிக்கையுடன் கூடிய ஒளிமயமான இளைய தலைமுறையை உருவாக்குவோம்.

கொரானா விடை பெறட்டும். ஒளிமயமான எதிர்காலம் உருவாகட்டும்.

பொன்னம்பல அடிகள்

எழுத்து வேந்தரே! எங்கே சென்றீர்?



"நற்கதை நம்பி" என்று நமது குருமகாசன்னிதானம் அவர்களால் பாராட்டப் பெற்ற பேராசிரியர் அய்க்கண் அவர்கள் மறைந்து விட்டார்! அனைத்து அன்பு உள்ளங்களிலும் நிறைந்து விட்டார்!

நம்பமுடியவில்லை! எமன் ஏன் அவரை எட்டிப் பிடித்து விட்டான்?

உலகம் தன்னைத் தனிமைப் படுத்திக் கொண்டிருந்த காலத்தில் (கொரானா காலத்தில்) நம்மை எல்லாம் தனிமைப் படுத்திவிட்டு மறைந்து விட்டார்!

உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைமைப் பொறுப்பில் ஓய்வில்லாப் பணிகள்!

காரைக்குடி புத்தகத் திருவிழாவினைத் தன் இல்லத்தின் சொந்தத் திருவிழாவாக நடத்தும் அறிவுத் தேனீ!

85 ஆண்டு வாழ்க்கையில் 90 நூல்களைப் படைத்துள்ளார். சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், வரலாற்று நாவல்கள், நாடகங்கள், கட்டுரைத் தொகுப்புகள் என எழுதிக் குவித்தவர்.

இவர் எந்தக் கதை எந்த இதழுக்கு அனுப்பினாலும் முதல் பரிசைத் தட்டிக் கொண்டு வரும். 1956 இல் 'ஆனந்த விகடன்' தொடங்கிய எழுத்துலகப் பயணத்தை மரணத்தின் கடைசி நொடி வரை தொடர்ந்தார்.

"நமக்கு தொழில் எழுத்து
நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராது இருத்தல்"
என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர்!

இவரது சிறுகதைத் தொகுப்பு ஒன்று 'பத்ர ஜன்' என்ற இந்தி மொழி பெயர்ப்பாக வெளிவந்தது. இவருடைய புத்தகங்கள் பல்கலைக் கழகங்களில், கல்லூரிகளில் பாடநூல்களாக வைக்கப்பெற்றுள்ளன. சிங்கப்பூர் பள்ளிகளிலும் பாடநூலாக வைக்கப்பெற்றுள்ளது.

தம் குடும்ப வாழ்விலும் நிறை வாழ்வு வாழ்ந்தவர். 'For the success of every man There is a women behind' என்று ஆங்கிலத்தில் கூறுவது போல் ஒரு வெற்றியாளனின் பின்புலத்தில் ஒரு பெண் மறை((நிறை)ந்துள்ளார்.


அப்படித்தான் அருளரசி வசந்தா அம்மையார் அய்க்கண் அவர்கள் வாழ்விலும் நிறைந்துள்ளார்.

"இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் எம் கணவனை
யானாகியர் நின் நெஞ்சுநேர்பவளே' (குறுந்தொகை – 49)
என்ற குறுந்தொகைப் பாடல் காட்டும் சங்ககாலத் தலைவன் தலைவி போல் வாழ்ந்து காட்டினர்.

"உலகிற்கு நீ ஒருத்தி - ஆனால்
ஒருவனுக்கு நீதான் உலகம்"
- என்று அய்க்கண் அவர்கள் தம் வாழ்க்கைத் துணைவி வசந்தா அவர்களைப் பற்றிக் கூறிய வரிகள் வைர வரிகளாகும்.

கலைமாமணி விருது, பேரறிஞர் அண்ணா விருது, தமிழ்ச்செம்மல் விருது என்று எண்ணற்ற விருதுகள் அவரைத் தேடி வந்தன. நிறைவாக நாமும் குன்றக்குடி வைகாசி விசாகப் பெருவிழாவில் "எழுத்து வேந்தர்" என்ற விருதை அருள்தரு

சண்முகநாதப் பெருமான் திருமுன்பு வழங்கிப் பெருமைப் படுத்தினோம்.



நம்மீதும், ஆதீனப்புலவர் மரு. பரமகுரு மற்றும் ஆதீன அலுவலர்கள் மீதும் அவர் காட்டிய அன்பு அளப்பரியது.

அய்க்கண் அவர்கள் இழப்பு ஈடு செய்ய முடியாதது.

எழுத்து வேந்தர், கலைமாமணி, டாக்டர் அய்க்கண் அவர்கள் மறைந்து நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அவர்தம் எழுத்துக்களால் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அய்க்கண் அவர்களின் ஈடு இணையில்லா எழுத்துப் பணியை, அறிவுச்சுடர் ஏந்திய புத்தகத் திருவிழாப் பணியைத் தொடர்வோம்.

அவரின் மறைவால் துயரப்படும் அவர்தம் குடும்பத்தார்கள், அறிஞர்கள், தொண்டர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெறட்டும்.

வாழ்க அய்க்கண் புகழ்!

வளர்க அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு!

பொன்னம்பல அடிகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

ஊர் நாய்

மாணிக்கவாசகர் நாடுமுழுவதும் சுற்றிப் பார்த்து நாட்டு மக்களின் நாடி பிடித்து, நன்மை தீமைகளை இனம் காட்டுகிறார். பிறர்மீது வைத்துக் காட்டவில்லை - தன்மீதே வைத்துக் காட்டுகிறார். இஃது ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரின் இயல்பு. அடியவர்கள் தம்மையுடைய தலைவனை - சிவபெருமானை நினைந்து உருகிக் காதல்மீக் கூர்ந்து அவனடியை நாடுகிறார்கள். ஆனாலும் அறிவிலாத மனிதனோ, தன்னையுடைய தலைவனை உணராமையின் காரணமாக அன்பு காட்டுவதில்லை. தலைவனை நாடிச் செல்வதில்லை. இறைக்கும் கிணறு ஊறுவதுபோல அன்பு காட்டுதலே அன்பைப் பெற்றுத் தரும்.

இங்ஙனம், தன்னுடைய தலைவனை ஏத்தி வாழ்த்தி வாழத் தெரியாத மனிதனை ஊர் நாய் என்று ஏன்? ஊர் நாயினும் மோசமானவன் என்றும் திருவாசகம் கூறுகிறது.

நாய்ப் பிறப்பு இழிவான பிறப்பு. எனினும் தனிப்பட்டவர்களுடைய வளர்ப்பால் - அரவணைப்பால் அது நலமாக வாழும். இன்பமாக இருக்கும். பாற்சோறும் பஞ்சணையும் பெறும். வளர்ப்பவரின் விருந்தினர்கள் தட்டிக் கொடுத்துத் தகுதியுண்டாக்குவார்கள். அவர் தம் வீட்டுக் குழந்தைகள் கொஞ்சிக் குலாவுவர். இத்தனை அரிய வாய்ப்புக்களையும் இழக்கும் வளர்ப்பார் ஒருவர் இன்றித் தானே வளர்ந்து வாழும் ஊர் நாய். ஊர் நாய் நற்சோறு உண்ண முடியாது. காரணம், போடுவார் இல்லை. அதனால் இழிந்த கழிவுப் பொருட்களை உண்டு வாழும் ஈனநிலை ஏற்படுகிறது. ஆன்மாவும் தக்க அறிவு தந்து நல்லாற்றுப் படுத்தும் தலைவன் இன்மையின் காரணத்தால் மும்மலத்திற் கிடந்து உழலும்; மும்மல வழிப்பட்ட உணர்வுகளைப் புசிக்கும்.

தக்க ஒருவரின் பாதுகாப்பின்மையால்தான் ஊர் நாயை எல்லோரும் அடிப்பர். ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்க நாதியில்லை. சட்டப்படி கூட கேட்க முடியாது. அதுபோல உற்றுழி உதவி உறுதுணையாக நின்று வாழ்வளிக்கும் இறைவனுடைய பாதுகாப்பில் அமர்ந்தால் அவர்களை யாரும் தாக்க முடியாது; தாக்கினால் தலைவன் - இறைவன் பாதுகாப்பான். "நமன் தமரும் இவன் தமர்" என்று தீண்ட அஞ்சி ஓடுவர். மார்க்கண்டேயர் வரலாறு இதற்குத் தக்க சான்று.

ஊர் நாய் ஊர் சுற்றித் திரிதலின் காரணமாக நிலையான உணர்வும், நினைப்பும், வாழ்க்கையும் அதற்கு இருக்காது. அதுபோல, இறைவனின் திருவடிச் சிந்தனையில் நிலையான நினைப்பில்லாதவர்கள் உலகியலில் நினைப்பு மாறி, நிலை மாறி சுற்றித் திரிகுவர்.

ஊர் நாய்க்கு முறையாகச் சோறிடுவோர் இல்லாமையின் காரணத்தாலும், சில பொழுது உண்டும் பல பொழுது உண்ணாமலும் வாழ்வதாலும் இளைத்துக் கிடக்கும். குளிப்பாட்டிச் சீராடடுவார் இல்லாத காரணத்தாலும் கண்ட கண்ட இடத்தில் படுத்துப் புரள்வதின் காரணத்தாலும் வங்கு பிடித்துக் கிடக்கும். அது போலவே, இறைவனின் திருவருள் நினைவு இல்லார் அந்நினைவு இன்மையின் காரணத்தால் உணர்வால் இளைத்து ஒழுக்கத்தால் இளைத்துக் கயமை நிலையடைவர்.

வங்கு பிடித்த ஊர் நாய் அரிப்பு மிகுதியால் தன்னைத் தானே கடித்துக் கொள்ளும். அதுபோல, திருவருட் சிந்தனையற்ற மனிதன் பேராசைகளால் அரிக்கப்பற்று அவ்வழிப்பட்ட குற்றங்கள் பல செய்து அதற்குரிய துன்பங்களைத் தானே பெற்று அனுபவிப்பான்.

நாய் இழிவான பிறப்பு. எனினும் நன்றி காட்டும் பண்பு அதனிடத்தில் சிறப்பாக உண்டு. நன்றி காட்டும் இந்தச் சிறப்பியல்பும்கூட ஒரு தலைவனிடத்தில் வளர்ந்தாலன்றோ விளங்க முடியும்? ஊர் நாயாக இருப்பதால் நன்றி காட்ட வேண்டிய அவசியமில்லாமற் போகிறது. மனிதனும், அந்த ஊர் நாய்போல் வாழ முடிவதில்லை. எந்த மட்டத்திலும் எந்தக் கட்டத்திலும் அவன் பலரின் உதவிகளைப் பெற்றே வாழுகிறான் – வாழவேண்டியவன். அதனால் அவன் நன்றி காட்டவேண்டியவனாக இருக்கிறான். ஆனால் அவன் நன்றி காட்டுவதில்லை. காரணம், அவன் ஊர் நாயினும் தரங்கெட்டவனாகத் தரணியில் உலவிக் கொண்டிருக்கிறான்.

ஊர் நாய் ஊரைச் சுற்றிக்கொண்டேயிருக்கும். நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டே இருக்கும். பயன் என்ன? நாலு எச்சில் இலையை நக்கிப் பார்க்கும் – தன் இனத்தைச் சார்ந்த வேறு நாய்களோடு தேவையின்றிக் குரைத்துக் கடித்தும் கடிபட்டும் வரும். அது போலவே, சிவச் சிந்தனை இல்லாத மனிதர்கள் ஒன்றிய சிந்தனையில் திளைக்காமல் – உறுதியான தொண்டுகளில் ஈடுபடாமல் ஊரைச் சுற்றுவர் – உடம்பாலும் சுற்றுவர் – உள்ளத்தாலும் சுற்றுவர். பயன் என்ன? வம்பளத்தல் – தீமொழி பேசல் – கலகம் விளைவித்தல் – கேவலமான முறையில் வயிற்றைக் கழுவிக் கொள்ள நான்கு காசு கிடைக்காதா என்று ஏங்கி நிற்றல் ஆகியனவேயாகும்.

வளர்ப்பு நாய் அருமையாகக் குரைக்கும். காரணத்தோடு குரைக்கும் - கள்வரைக் காட்டிக் கொடுக்கும். ஆனால் ஊர் நாயோ எப்பொழுதும் குரைக்கும். அச்சத்தாற் குரைத்துக்கொண்டே இருக்கும். அதுபோல் திருவருட் சிந்தனையில்லாதவர்கள் - உறவில்லாதவர்கள் நிறையப் பேசுவர் - பயனற்ற சொற்களையே பேசுவர் - பகைகாட்டும் சொற்களையே பேசுவர் - அச்சத்தினால் பேசித் திரிகுவர் - ஆனால் ஒரு பயனும் காணார்.

நாய் இயல்பாக அறிவில்லாதது. அறிவுடைச் செயல்கள் செய்யும் ஆற்றல் இயல்பில் இல்லை. ஆனாலும் அது ஒரு வளர்ப்பு நாயாக இருந்தால் - வளர்ப்பவர்கள் முறையாக வளர்த்தால் சொன்னதைக் கேட்கும்; செய்யும்! அறிவோடு தொடர்புடைய காரியங்களை கூடச் செய்யும். இயல்பாக இல்லாத ஒன்றை வளர்ப்பின் மூலம் பெற்று விடுகிறது. ஊர் நாய் இந்த வாய்ப்பை இழந்து வருகிறது. அதுபோலவே மனிதனும் தக்கவர்களைச் சார்ந்து வளர்வதன் மூலம் தன்னிடத்தில் இயல்பில் இல்லாத அறிவு, ஆற்றல் போன்ற பண்புகளைப் பெற்றுச் சிறக்க முடியும். தக்கோரைச் சார்ந்து வாழாதவன் அத்தகு அறிவு ஆற்றல் பண்புகளைப் பெறமாட்டான்.

வளர்ப்பு நாய்க்குத் தன்னுடைய வளர்ப்புத் தலைவனுக்கு நன்றி காட்டவேண்டும் - அவனையும் அவனுடைய உடைமைகளையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கடமையுணர்வு இருக்கும். ஊர் நாய்க்கோ ஒருவர் ஏது? அதுதான் வீதிமுழுதும் சுற்றுமே! ஆதலால் கடமையுணர்வு அரும்பித் தோன்ற வழியில்லை. அதுபோல, கடவுள் நினைவும், உறுதியான மனித இயல்பும் உடையோர் ஒரு தலைவனை - நண்பனை நாடி வாழ்வர். அவனுக்குரிய கடமைகளைச் செய்வர். அங்ஙனம் அல்லாதவர்கள் ஒரு எச்சில் இலையை முடித்து, அடுத்த எச்சில் இலைக்கும் ஓடும் ஊர் நாய் போல் அடிக்கடி ஆளை மாற்றுவார்கள். ஆதலால் அவர்களுக்குக் கடமையுமில்லை. எனவே, திருவருட் சிந்தனையோடு நல்லியல்புகள் பெற்று வாழ்க்கை வாழ்தலே சிறப்புமிக்கது. இதனை மாணிக்கவாசகர் கூறுகிறார், பாருங்கள் :

உடையா னேநின் றனையுள்கி
　உள்ள முருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதம்
　சேரக் கண்டிங்(கு) ஊர்நாயின்
கடையா னேனெஞ்(சு) உருகாதேன்
　கல்லா மனத்தேன் கசியா தேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங் (கு)
　இருப்ப தாகமுடித்தா யே!

(தொடரும்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஞானாமிர்த சாரம்

குன்றக்குடியில் 29.12.1939இல் நடைபெற்ற
சைவசித்தாந்த மகா சமாசக் கருத்தரங்கச் சொற்பொழிவு

உரைவேந்தர். ஔவை. துரைசாமி பிள்ளை
(சமாசத்தின் "சிவநெறிச் சிந்தனை" தொகுப்பு நூலிலிருந்து)

இவ்வாறு பசுபாச இயல்புகளை விளக்கிவந்தவர். பின்பு பதியின் இயல்புகளைப் பல அளவைகளால் வற்புறுத்தி, அவன் அருவுருவத் திருமேனி உடையனாதலை விளக்குவார். விந்துநாத தரிசனமுடைய சிவயோகிகளுக்காகவும், எல்லாப் பொருளினும் கலந்துநின்று. அவரவர் பக்குவத்திற்கேற்ப காட்சி வழங்குவதற்காகவும் அருவுருவனாகின்றான் என்றும், அருட்குரவனாய் எழுந்தருளுங்கால் கொள்ளும் உருவத் திருமேனி. அவன் தானே சங்கற்பித்துக் கொள்வதென்றும் கூறுகின்றார். இச்செய்தி.

"அகளமாய் யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற;
தானாகத் தந்ததென றுந்தீபற"

என்ற திருவாக்கை நினைவுறுத்துகின்றது. அங்ஙனம் அவன் சகளீகரித்து வரும் திருவுருவைக் கூறுவார்.

"இரந்து குறையுறினும் பிறந்தை எந்திறம்
மறந்தும் நோக்காது; எவன்புகல் எமக்குஎன
ஒழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை
ஒருவன் பாத மல்லதை
பிறிது முண்டோ பெரும்புகல் நமக்கே" (ஞானா-53)

என்கின்றார்.

இனி, சத்திநிபாதமுற்று மெய்யுணர்வு கூடியவர் அந்தரங்க தியானத்தால் அச்சிவத்தைக் கூடிப்பெறும் இன்பம் எத்தகைத்து எனின். அஃது உரையிறந்து நிற்கும் உவட்டாப் பேரின்பம் என்பார்.

"கலவி விளைந்த காமத் தேறல்
உண்டோர் உணரின் அல்லதை யவருங்
கொண்டுரை கூடா மாறு" (ஞானா - 67)

என்கின்றார்.

இனி, முத்தியின்கண் சிவஞானிகள் சிவத்தோடு அத்துவிதமாகும் இயல்பினை மூன்று வகை உவமைகளால் விளக்குகின்றார். உப்பளத்துப் பட்டவை உப்பாதலும், உவரிபுக்க நன்னீர் உவரி நீராதலும் புழு வேட்டுவனாதலும் போல அத்துவிதமாவர் என்கின்றார். அது,

"முதுதிரை முந்நீர் விரிதரு காயல்
வித்தாது விளைத்த வெண்திரள் பழனத்து(உப்பு)
உற்றவை யெவனோ, உரவ, துப்புவளர்
உவரி யுற்ற தீநீ ரல்லதை
கவர்பு முண்டோ, கற்றோய், கவர்புக
மண்புனை மதிற்பெய்து ஒண்சிறை பரப்பி
ஊதுவண் டுணர்ந்த பேதை வான்புழு
மாதர்வண் டாவதை யறிதி; கோதற்று
அமலனை ஆசற வுணர்ந்த
அமலர் செய்தியும் அற்றால் மற்றே"

என்பது,

இந்நிலையில் நுண்ணிய தருக்கமுறையில் கடாவொன்று எழுப்பி விடை பகரப் பெறுகின்றது. ஆன்மாக்கள் சிவமாந்தன்மை எய்துமிடத்து, பசுத்துவம் கெட்டபின் பதித்துவம் எய்துமோ, பதித்துவம் எய்தியபின் பசுத்துவம் கெடுமோ எனின், பசுத்துவம் கெட்டபின் ஆயின், "கெட்டது ஆதல் தானும். அமரர்க்கானும் மேவாதாகும்" என்பதனால், பதித்துவம் பெறுமாறு இல்லை; பதித்துவம் எய்தியபின் ஆயின், கெடுதல் பதித்துவத்துக்குக் குற்றமாகும்; அதனால், இரண்டும் ஒருகாலத்து நிகழ்ச்சி என்கிறார்.

"அழிந்தாய்த் தன்று, ஆயழிந்தது மன்று
மொழிந்தவை இரண்டும் ஓரமை யத்தே" (ஞானா -74)

என்கின்றார்.

இனி, பசுத்துவமின்றிப் பதித்துவம் எய்திய ஆன்மா எவ்வண்ணமுள்ளது என்பதற்கு, உப்பளத்தில் கொம்பொன்று. உப்பே என்னுமாறு உப்பேற்றி நிற்றல் போல, பதித்துவம் எய்திய ஆன்மா சிவமேயாகித் தூய்மையாக உள்ளது என்றும். இஃது ஆண்டுப் பெறும் இன்பத்தை, கானலிடத்து அலவன் பெடையோடு கூடிப் பெறும் இன்பத்தோடு உள்ளுறுத்தும் கூறுகின்றார்.

"................................ அளிவளர்
தடவுநிலைப் புன்னை மடலவிழ் வாசம்
கடற்புல வகற்றும் கானல் அலவன்

வன்பெடை தழீஇ இன்புறு காயல்
உப்புவிளை பழனத் துற்ற பொன்தோட்டு
உலவையின் அறிக மாதோ
கலைவ லாளர் நிலைபுணர் பண்பே" (ஞானா - 74)

இதன்கண் கடற்புலவைப் புன்னையின் மடலவிழ் வாசம் மாற்றும் என்றதனால். பாசபந்தமாகிய அஞ்ஞான நாற்றத்தை, பாசச் சேதமாகிய ஞான மணம் பரந்து மாற்றும் என்றும். அலவன் வன்பெடை தழீஇ இன்புறும் என்பது உயிர் அவாவறுத்து மெய்யுணர்வுற்றுச் சிவத்தோடு கூடிப் பேரின்பம் நுகரும் என்றும் கூறி, சிவத்தோடு அத்துவிதமாகிய வழி. ஆன்மா சிவத்துக்குரிய தலைமை இயல்பெல்லாம் பெறாது என்பதை வற்புறுத்துவது குறித்து. "உலவையின் அறிக" என்றும், "நிலைபுணர் பண்பு" என்றும் கூறியுள்ளார். ஊடலுற்று. நீக்க நீங்கிக் கூடிய பெடை என்றற்கு. வன்பெடை என்றார். இன்றேல் மென்பெடை என்று கூறியிருப்பார்.

பாசபந்தமாகிய அஞ்ஞானம் பாசச் சேதமாகிய ஞானத்தால் கெடும் திறத்தைப் பிறிதோர் இடத்தில் வேந்தர் இருவர் போர் செய்து பெறும் வெற்றிச் செயல் மேல்வைத்து மிக அழகாகக் கூறுகின்றார். பாசபந்தமாகிய அஞ்ஞான வேந்தன்.

பொறாமை, அவா	காவற்காடு ஆகவும்
புத்திரர், தாரம்	அகழி ஆகவும்
தேகம்	வேலி ஆகவும்
கோபம், மாற்சரியம்	சேனை ஆகவும்
ஐம்பொறி	யானை ஆகவும்
ஐம்புலன்	தேர் ஆகவும்
மனம்	குதிரை ஆகவும்
அறியாமை	மந்திரி ஆகவும்
புண்ணிய பாவம்	நகரி (அரண்) ஆகவும்
நால்வகைப் பிறப்பு	தேசம் ஆகவும்

கொண்டு எதிர்க்கவே பாசச் சேதமாகிய ஞானவேந்தன்.

புத்தி	மந்திரியாகவும்
விரக்தி	சேனை ஆகவும்
பொறை	தேர் ஆகவும்
உபதேசம்	குதிரை ஆகவும்
அவாவறுத்தல்	யானை ஆகவும்

கொண்டு சென்று.

"அடுமிளை பொடிபட எறிந்து, நெடுமதில்
அகழியொடு இடிய நூறிக், கொடுநகர்
எரிவிருந்து ஊட்டி, அரிதுபெறு சிறப்பின்
தன்னுடை நாசம் மன்னன் எய்தப்
பரமா னந்தப் பைதிரம்
வளையாச் செங்கோல் ஓச்சினன் நெடிதே" (ஞானா - 33)

என்பதனால் இச்செயலை அழகுறுத்துகின்றார். உயிர்கள் வினைத் திரளை ஈட்டிப் பிறவித் துன்பம் எய்தும் திறத்தை அரசன் செயல்மேல் வைத்து.

"........ துயரிடை வினைநகர்க்
கருங்கைக் கயமைக்களிறு உகைத்து, இரும்புலப்
பெரும்படை விரிந்துசூழத் திருந்தா
நாற்கதிப் பவன் யுலாஅய்
ஆர்த்தவிழ் திறம்பிற; போற்றுமதி புரிந்தே" (ஞானா -26)

என்று கூறுகின்றார்.

இங்ஙனம் தாம் உணர்ந்து உரைத்த ஞானாமிர்தச் சிறப்பை, இந்நூலாசிரியரே பிறிதோர் இடத்தில்,

"தேனுடன் அமிழ்து கலந்தன்ன சுவைய,
அமிழ்தூண் அண்டரும் பெறற்கருந் தகைய,
தண்டாப் பிறவிப் பேரிடர் எறிப,
உரையுணர்வு கூடா வரகதி யுய்ப்ப
மதியோர் ஆனாது பருகுவ, பருகியும்
அமையாது நுவலும் அமைதிய, பாச
வல்லி வேரற நிமிர்ப, எல்லையில்
மறக்குறும் பறுப்ப, அறத்தின் வேலிய,
தனக்குநிக ரில்லாத் தகைமைய, மனத்தின்
மாசறக் களைவ, தேசொடு நிவந்த" (ஞானா - 32)

பாசச் சேதமாகிய ஞானாமிர்தம் என்கின்றார்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்நூலின் சாரத்தை அறிவில் சிறிய அடியேன் கூறியதில் குற்றங்கள் மிக இருக்கலாம். கருத்து வேறுபாடு இருக்கலாம். இவற்றை ஏற்று யான் இதுகாறும் செய்த என் சிறு சொல்லை அமைதியோடு கேட்டு என்னை ஊக்கிய சைவப் பெருமக்களாகிய உங்களுக்கும், என்னை இவ்வாண்டு விழாவிற்கு வரவழைத்து என் பணியை ஏற்றுச் சிறப்பித்த இச்சைவ சித்தாந்த சமாஜத்திற்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என் சொற்பொழிவை இவ்வளவில் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

(முற்றும்)

திருக்கைலாய பரம்பரை பொம்மபுர ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள்
ஆதீன வித்துவான்
பண்ருட்டி மணி. சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய

குன்றக்குடி குமாரக்கடவுள்
சிகாமணி மாலை

காப்பு
கலிவிருத்தம்

பூவின்மேவும் பொழிற்குன்றை புரிவளர்க
கோவின்மேவுங் குகற்கோரலங்கலைப்
பாவின்மேவிப் பகரமாவானனத்
தேவின்மேவித் திகழ்பவற் போற்றுவாம்.

சந்தத் தாழிசை

வானோர் பணித்தேத்து மகபதி மான்மகனும்
மேனாட் பணிந்தேத்திட மிக்கருட்செய்
மானார் விழியார் தெய்வ குஞ்சரி வள்ளிமகிழ்த்
தேனார் பொழிற்குன்றை குமார சிகாமணியே (1)

தண்ணார் வடகைலை வளர்சிவந் தன்னுதற்சேர்
கண்ணாறில் வந்தே சுரர்க்காத் தருட்செய்
விண்ணோர் முதலே வடிவேற்கை குகா
தெண்ணோர் பணிகுன்றை குமார சிகாமணியே (2)

அந்தாமரையான் குடிற்பொரு ளறியாமையினா
னந்தாச்சிறை செய்து பின் னல்லருள் செய்
கந்தாசிவ மோர்ந்திட வப்பொருள் கரைவோய்
வந்தாளெனைக் குன்றை குமார சிகாமணியே (3)

எல்லாம் வல சித்தரியற்றமிழ்க் கோர்புகர்சொல்
பொல்லானுனைப் போற்றிப் புகழ்ந்திட வருள்புரியு
நல்லாய் முருகாவெனு நாரிக்கோர் கைதரும்
வல்லார் பணிகுன்றை குமார சிகாமணியே. (4)

தஞ்சமென வேபணி யடியரையே யென்றுந் தணவர
தஞ்சலென வபயந்தரு மறுமாமுக குருவே
வஞ்சங் கழற்சான்றோ ரகத்தி லெஞ்ஞான் றும்வதி
மஞ்சார் தவழ்குன்றை குமார சிகாமணியே (5)

தென்னாப்பொதி குருமுனிக்கே தமிழ் தெரித்த
வன்னப் பசுமஞ்ஞைதூர் சண்முக மாமணியே
துன்னும் வரைக்காவடிக்கியற் கருணை சொரி
மன்னர் பணிகுன்றை குமார சிகாமணியே! (6)

மாவாய்வரு கரிமுகற் கஞ்சிய வள்ளியற் கோர்
கோவாய் வரு மெங்குரு நாதகுகா முருகா
பூவார் கடம்பலங் கற் புனைந்திடு புண்ணியனே
தேவர் புகழ்குன்றை குமார சிகாமணியே (7)

இகமும் படிறானவர் தருக்கினை யிழித்தெவரும்
புகழ்ந்தே பதம் போற்ற புரிந்தருட் புண்ணியனே
நகமாமக ளெடுத்து மகிழ்ந்தணை நாயகமே
திகழும் வளக் குன்றை குமார சிகாமணியே. (8)

அறவோ ரறுகாலமு மேற்றி யரற்றிடவே
யுறவா யவர்க் கின்னரு ளக்கண முதவுகுகா
துறவா யொரு கனிபொருட்டே வரைதோய்ந்தவா
மறவர் பயிற்குன்றை குமார சிகாமணியே. (9)

ஆர்த்தார்வமாய் நின்கழலென்று மரற்றிடவே
கார்த்தாளுவை கந்த குகா கடையேன்றனையே
சூர்தாக்கிய சுந்தர சண்முக சுடர்வேற்
றீர்த்தா புகழ்க்குன்றை குமார சிகாமணியே. (10

என்று முனதின்னரு ளன்றி யானெச்செயலுந்
துன்ற லிலை யாதலின் றாய் துணையாய்க்
கன்ற லிலா தென்வயி னின்னருட் கலந்தருள்வாய்
மன்றற் பொழிற் குன்றை குமார சிகாமணியே. (11)

கல்லைப் புகடோறுங் கலந்துறை கண்ணியனே
யில்வைப் புடை வைசிய ரென்று மிலங்கிடவே
மல்குங் குழலா ரிருவோருடன் மயிலிவருஞ்
செல்வம் மலிகுன்றை குமார சிகாமணியே. (12)

– முதற்பதிப்பு கலி.5028 பிரபவ கும்பமதி
உதவி : புலவர்.வ. ஞானப்பிரகாசம்

"குற்றம் செய்தாலும் குணம் எனக்கருதும் கொள்கை" – ஒரு சிந்தனை

(தருமையாதீனப்புலவர் தா. குருசாமி தேசிகர்)

திருப்புன்கூரில் சுந்தரர் அருளிய தேவாரத்தில் ஒன்று சிந்தனைக்குரியது. அப்பாடல் முழுதும் காண்போம்.

"நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கரையன் நாளைப்போவானும்
கற்றசூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டு நின்குரை கழலடைந்தேன்!
பொற்றிரள் மணிக்கமலங்கள் மலரும்
பொய்கைசூழ் திருப்புன் கூருளானே"

இப்பாடலில் சுந்தரர் இறைபணியில் குற்றம் செய்தவர்கள் பட்டியலை விவரிக்கின்றார். இந்த விவரங்களை உடனிருந்து கேட்டவர் ஏயர்கோன் கலிக்காமர் ஆவார். சுந்தரர் இறைவனைத் தூதுவிட்ட செய்திகேட்டு, கலிக்காமர் கோபங்கொண்டு இறைவனைத்தூது விட்ட சுந்தரர் மேல் பிணக்கம் கொண்டு, பின்பு திருவருளால் இணக்கமான வரலாறு தெரிந்ததே.

அக்கலிக்காமர் திருப்பணிசெய்த திருப்புன்கூர்த்தலத்தில் சுந்தரரோடு வழிபாடு செய்யும்போது, தூதுவிட்ட குற்றத்தைப் பெரிதாக்கிக் கொண்டு, திருவருளால் அதனை மறந்த கலிக்காமர்க்கு, சுந்தரர் வணங்கத்தக்க, சம்பந்தர், அப்பர், நந்தனர் முதலியோர் குற்றம் செய்த பணியில் இறைவன் அதனைப் பொருட்படுத்தாது, அவர்கட்கு அருளிப்பாடு செய்ததைப் பட்டியலிட்டுக் காட்டி, தன்னையும் இறைவன் கருணைகூர்ந்து, தூதுசென்று உதவியதைக் குற்றமாகக் கொள்ளாமல் குணங்கொண்டு கோதாட்டிய வரலாற்றை, கலிக்காமர்க்கு நினைவு கூரும் வாய்ப்பால் இப்பாடல் உள்ளது. இனி, குற்றம் செய்தவர் பட்டியலை வரிசையாகக் காண்போம்.

இக்குற்றங்களை விளக்கமாக எழுதி அருள்செய்த தருமையாதீனப் பேருரைக்கு முதலில் நன்றி கூர்தல் வேண்டும்.

i. ஞானசம்பந்தர் செய்த குற்றம் பாண்டியன் சமணரைக் கழுவேற்றியதனை விலக்காதிருந்தது. இவ்வுரைக் குறிப்புக்கு மேல், திருவாமூர் கொண்ட குருமணிகள், சம்பந்தர் திருவாவடுதுறையில் பாடிய "இடரினும் தளரினும் எனதுறுநோய்ப்" பதிகத்தில் "இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக்கு இல்லையேல் அதுவோ உனது இன்னருள்?" என்று அருளிச் செய்த செயல்கள்தான், நட்பில் சொல்லிக்காட்டுதலாகிய குற்றம் உடையது என்று கருதி முதல் ஞாயிறில் உபதேசம் செய்த கருத்தையும் பதிவு செய்வேன்.

ii. நாவுக்கரசர் செய்த குற்றம் : சமண சமயம் புகுந்து முதல்வன் திருவருளை இகழ்ந்து நின்றது.

iii. நாளைப்போவார் செய்தது : நாளைப் போவேன் என்று துணிந்து அருள்பெற்றது.

iv. மூர்க்கர் செய்தது : சூதாடியது.

v. சாக்கியர் செய்தது. இலிங்கத் திருமேனியைக் கல்லால் எறிந்தது.

vi. சிலந்தி செய்தது : வாய் நூலால் இலிங்கத் திருமேனி மேற் கூடு வேய்ந்தது. இது செங்கட்சோழன் முற்பிறப்பாகும்.

vii. கண்ணப்பர் செய்த குற்றம் : செருப்புக் காலை இலிங்கத் திருமேனியின் முடியில் வைத்ததும், வாய் நீரை அதன்மேல் உமிழ்ந்ததும் ஆகும். இறைச்சி படைத்ததும் எச்சில் பட்டது ஆகும்.

viii. கணம்புல்லர் செய்த குற்றம் :
திருக்கோயிலில் தம்தலைமயிரை விளக்கென்று எரித்த செயலாகும். இவர்கள் அனைவரும், மனத்துக்கண் மாசிலராய் அருள்வழியாலும், அன்பு வழியாலும் செய்தனவற்றை உலகவர் அறியமாட்டார்.

ஆனால் இறைவன் இவற்றைக் குற்றமாகக் கருதாமல் அவர்கட்கு அருள்செய்தார். ஆதலால் சுந்தரரும் இறைவனைப் பரவையார்பால் தூதுவிட்டுச் செய்த செயலும், குற்றம் ஆகாமையாயிற்று - என ஏயர்கோன் கலிக்காமர் உணருமாறு குறிப்பாக அருளிச்செய்த செயலுமாயிற்று என, தருமையாதீனம் 26ஆவது முதுபெருங் குருமணிகள் அருளிச்செய்து உணர்த்துவார்கள். குற்றமாக நினைப்பதில் இறைபக்தி மேலோங்கி இருந்தால் இறைவன் ஏற்பான் என்பது கோட்பாடு.

இப்பாடற்கு, முந்திய பாடலில் சண்டேசுர நாயனார்க்குச் செய்த திருவருளை விளக்கமாகப் பாடிய சுந்தரர், தந்தை என்றும் பாராமல், சிவன்மேற் காலால் இடறிய குற்றத்திற்கு, அக்காலை வெட்டிய செயல் குணமாகக் கொண்டு அருளிச்செய்த வரலாறும் ஒப்புநோக்கத்தக்கது.

திருவள்ளுவர், "தெரிந்து தெளிதல்" அதிகாரத்தில் "குணநாடிக் குற்றமுநாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்ற குறளில்

"குற்றமின்றிக் குணமேயுடையார் உலகத்தில் கிடைத்தற்கு, அரியராகலால், யாவரையும் குணம், குற்றம் இவைகளே ஆராய்ந்து, குணமிக்கவரை வினைக்கு உரியவரென்று தெளிந்து, குற்றமிக்கவரை உரியரல்லர் என்று அறிய வேண்டும் என்பார்" குறளார்.

சம்பந்தர், திருவாலவாய்ப் பெருமானை நிறைவாக வழிபட்டுப் பாடிய பதிகம் ஒன்றில்,

"குற்றம் நீ குணங்கள்நீ கூடலாலவாயிலாய்"

என்று அருளுவதும் எண்ணிப் பார்க்கத்தக்கது.

இனி, சம்பந்தரின் "கருப்பறியலூர்" பதிகத்தின் முதற்பாட்டில், சுற்றம், பற்று ஆகியவற்றை முற்றிலும் அறுத்துக் குற்றமற்ற நல்ல குணங்களோடு, கூடிவிளங்கும் அடியவர்களைத் தான் சிவபிரான் ஆட்கொண்டு அருள்செய்வான் என்று தெளிவுபடுத்துவார். அப்பாடல் முழுதும் உணரத்தக்கது.

"சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவனிருப்பது கருப்பறியலூரே"

என்று பாடலில் "துயக்கு" என்பது அறிவுவேறுபடல், சிவபிரானையே அறியும் அறிவு வேறுபடாதவாறு சுற்றம் முதலியவற்றை அறுத்தல் தான் "குணம்" என்றருளுவார் சம்பந்தர். இறைவழிபாட்டின் உச்சம் பற்றறுதலும், அதன்மூலமாகப் பிறப்பறுத்தலும் ஆகும். இக்கருப்பறியலூர், கருமூலத்தைப் பறிப்பதால் இப்பெயர் பெற்றது ஆகும். இன்று இத்தலம் வைத்தீஸ்வரன்கோயிற்கு அண்மையில், "தலைஞாயிறு" என்ற பெயரோடு, தருமையாதீன நிர்வாகத்தில் உள்ளது.

அப்பரடிகளும், திருவாரூர்ப் பதிகத்தில்,

"குற்றமுடைய அமணர்திறம்
கையகன்றிட்டு
உய்யபோந்தேன்" என்று அருளுவார்.

எனவே, நம்மாழ்வாரும், இதே கருத்தை வலியுறுத்தி

"பற்றிலனனும் முற்றவும் நின்றனன் ஈசன்
பற்றிலையாய் அவன்முற்றிலடங்கே" - என்றும் அருளிய திருவாக்குகளும், "உலகியலியற்கையை ஒழித்திட்டு அற்றவர்க்கு சுற்றவன் சிவன்" என்றும் அருளிய சம்பந்தர் திருவாக்கும் இறையடியார்கள் இறைவனோடு சம்பந்தப்பட்டவர் ஆதலின், சில செயல்கள் உலகியலில் குற்றமாகக் கருதப்பட்டாலும், இறைநோக்கில் குணமாகவே கொள்ளப்படும் என்பதை உணர்தல் சிவநெறிக் கோட்பாடாகும்.

இசை அரசி எம்.எஸ்.



மதுரை சண்முகவடிவு
சுப்புலெட்சுமி
எம்.எஸ்.நீ
ஈரெழுத்து
இசைக்குயில்!
உன்தாய்
சண்முகவடிவு
வீணை வித்தகி;
விரல் நர்த்தகி!
உன் பாட்டி
அங்கம்மாள்
வயலின் ஸ்வரலயம்
உன்புன்சிரிப்பு
சங்கீத அலை.
ஐ.நாவில்
இசை மாலை
உலகக் காற்றில்
உலாவந்து
உன் புகழை
நிலை நாட்டியது!
வாழ்க உன்புகழ்
இசை உள்ளவரை!

- சுப. இராமமூர்த்தி

வருந்துகிறோம்!

"மக்கள் சிந்தனை" இதழ் கரோனா தொற்று காரணமாகவும் பிற காரணங்களாலும் தடைபட்டுப் பலதிங்கள்களாக வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம்.



கலாம் காட்டிய நேர்மை

(கவிவேந்தர் கா. வேழவேந்தன்)

ஆற்றலினால், அரும்பண்பால் உலகோர் நெஞ்சில்
அமர்ந்திருந்த கலாம்மகனும் இந்த மண்ணின்
காற்றோடு காற்றாகக் கலந்தே விட்டார்!
காவியத்து நாயகனின் வாழ்வில் கண்ட
ஏற்றமிகு உயர்குணமும் ஒன்றா? அந்த
இளைஞர்களின் "பெரும்புதையல்" விட்டுச் சென்ற
மாற்றமிலாப் பண்புகளில் ஒன்றை மட்டும்
மனம்நெகிழக் கூறுகின்றேன், இப்பக் கத்தில்!

குடியரசுத் தலைவர்எனும் பொறுப்பை ஏற்றக்
கோலமகன் முதன்முதலாய்க் குசராத் மண்ணில்
அடிவைத்தார்; காந்தியண்ணல் "சபர்மதி"க்கே
ஆவலுடன் சென்றிட்டார்; ஆங்கி ருந்தோர்
படிப்பாளர் கலாமுக்குக் காந்தி யாரின்
பயன்நூல்கள் அத்தனையும் பரிசாய்த் தந்தார்!
நடிப்பறியா கலாம் சொன்னார்; "இந்த நூல்கள்
நான்பெறுவேன், உரியவிலை தந்தே!" என்றார்!

"இது வழக்கம்; பெருமக்கள் எவர்வந் தாலும்
இலவசமாய் அன்பளிப்பாய்த் தருவோம்!" என்றார்!
"அது உங்கள் வழக்மென்றால், என்வழக்கம்
அவற்றின்விலை தருவதுதான்!" என்றே சொன்னார்.
அதிகாரம் பெற்றவர்கள் இந்த நாட்டில்
அவ்வளவும் தமக்காகச் சுருட்டும் போது,
விதிமீறாக் கலாம்செம்மல் நேர்மையோடு
விலை தந்தே நூற்கட்டைப் பெற்றுச் சென்றார்!

தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையில் 46 ஆம் ஆண்டுவிழாவில்

தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களின் அற்புதச் செம்மொழி உரை

தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையின் 46ஆம் ஆண்டு விழா தஞ்சாவூர் பெசண்ட் அரங்கில் சென்ற 29.02.2020 சனிக்கிழமை மாலை 6 மணி முதல் 8.30 மணி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அப்போது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மிகச் சிறந்த உரையாற்றினார்கள். அவர் உரையாற்றும்போது எடுத்த எடுப்பிலேயே அந்த விழாவில் திரு.க.பா. அறிவானந்தம் (தாளாளர் மார்னிங்ஸ்டார் மெட்ரிக்பள்ளி, தஞ்சாவூர்) திரு. எஸ். பாபாஜி ராஜா போன்ஸ்லே, நல்லாசிரியர் திரு. ப. சண்முகம், திரு.வெ. நாராயணசாமி (தலைவர், குறள்நெறிக்கழகம், சடையார்கோவில்) ஆகிய நால்வருக்கும், திருக்குறள் பேரவை, தஞ்சாவூர், தலைவர் திரு.செ.பா. அந்தோணிசமி (கிருத்துவர்) பாரிவேள், சி.நா.மீ.உபயதுல்லா (முஸ்லிம்) அடிகளார் (இந்து) ஆகிய மூவரும் இணைந்து குறள்நெறிச்செம்மல் விருது வழங்கியதைக் குறிப்பிட்டு இதுதான் திருக்குறள் சாதித்தது (சாதி, மதம் கடந்தது) என்று குறிப்பிட்டார். இது அனைவர் உள்ளத்தையும் கவர்ந்ததால் கையொலி எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். மேலும் உரையாற்றும்போது ஆண்டவன் விருப்பு வெறுப்பில்லாதவன் என்பதற்கு வேண்டுதல் வேண்டாமை என்ற குறளை எடுத்துக் காட்டினார்.

பிறகு ஒரு முனிவர் ஆற்றங்கரையோரம் வரும்போது (அந்தக் காலத்தில் படிகள் கட்டப்படவில்லை) ஒரு தேள் தண்ணீர் தத்தளித்து உயிருக்குப் போராடுவதையும் (தேள்மட்டுமல்ல எந்த ஜீவராசியும் தண்ணீரில் தத்தளிக்கும் போது எப்படியும் உயிர் பிழைக்க எண்ணும், பார்த்த முனிவர் அதைத் தன் கையால் எடுத்துத் தரையில் விட்டு அதன் உயிரைக் காப்பாற்றினார். ஆனால் அந்தத் தேள் உடனே முனிவரைக் கொட்டிவிட்டது. மீண்டும் தேள் ஆற்றில் விழுந்துவிட மீண்டும் முனிவர் எடுத்துக் கரையில் விட மீண்டும் அது முனிவரைக் கொட்டிவிட இப்படி சில தடவை நடந்ததைக் கண்ணுற்ற ஒருவர் முனிவரிடம் அதுதான் கொட்டுகிறதே, ஏன் அதைக் காப்பாற்றுகிறீர்கள் என்று கேட்க முனிவர் தேளைக் காப்பாற்றுவது எனது கடமை, இயல்பு, அதேபோல் தேள் கொட்டுவது அதனுடைய இயல்பு என்று கூறினார் என்று குறிப்பிட்ட அடிகளார் அதற்குப் பொருத்தமாக

அறிவினான் ஆருவதுண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றக்கடை

என்ற குறளை எடுத்துக் காட்டினார்.

பிறகு ஒரு முனிவர் காட்டில் மோட்சம் வேண்டி கடுமையான தவத்தில் ஈடுபட்டதால் அவரது தலை தவிர உடல் முழுதும் புற்று வளர்ந்திருப்பதாகவும், அதே காட்டில் ஒரு இளைஞன் மிகவும் ஆடிப்பாடிக் கொண்டிருந்தான் என்றும் அப்போது அவ்வழியே சென்ற நாரதரிடம் இருவரும் தங்களுக்கு எப்போது மோட்சம் கிட்டும் என்று கடவுளிடம் கேட்டுவரச் சொல்லியிருக்கிறார்கள். கடவுளைப் பார்த்துவிட்டு நாரதர் திரும்பி வரும்போது முனிவர் தனக்கு எப்போது மோட்சம் கிடைக்குமென ஆண்டவன் கூறினார் என்று கேட்க இன்னும் பல ஆண்டுகளாகும் என ஆண்டவன் கூறியதாக நாரதர் சொன்னார். அதே போல இளைஞன் கேட்க நாரதர் பக்கத்திலுள்ள மரத்தைக் காட்டி அதிலுள்ள இலைகள் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு பிறவி எடுத்தபிறகே மோட்சம் கிட்டும் என்று கடவுள் சொன்னார் என்று கூறியதும் இளைஞன் எனக்கு மோட்சம் கிடைத்துவிட்டது என மகிழ்ந்து கூத்தாடினான் என்று குறிப்பிட்டார்.

பக்தி எப்படிப்பட்டதாக இக்காலத்தில் இருக்கிறது என்பதை ஒரு நிகழ்ச்சியின் மூலம் குறிப்பிட்டார். அதாவது ஒருவர் கோவிலில் சாமிக்கு அர்ச்சனை செய்வதற்காக தேங்காய் வாங்கும் பொழுது ஒவ்வொரு தேங்காயையும் எடுத்துக் காதருகே ஆட்டி ஆட்டிப் பார்த்து வைத்துவிட்டு அடுத்த காயை எடுத்து காதருகே ஆட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். இப்படி 100 காய்களுக்கு மேல் பார்த்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த ஒருவர் அர்ச்சனைக்கு ஒரு காய்தானே வாங்கப் போகிறீர்கள் எதற்கு இப்படி சுமார் 100 காய்களுக்கு மேல்காதருகே ஆட்டி ஆட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர் அர்ச்சனைக்கு என்றாலும் வீட்டில் சட்னி அறைப்பதற்கு ஏதுவான நல்ல தேங்காயாக வேண்டுமல்லவா? அதனால்தான் சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றார். இப்படி இன்றைய பக்தியை அடிகளார் தோலுரித்துக் காட்டியதை மக்கள் வெகுவாக கைதட்டி ரசித்தனர்.

பாற்கடலில் அமிர்தம் பெறக் கடைந்து கொண்டிருந்தபோது விஷம் வெளியேவர தேவர்களோ, அசுரர்களோ ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத நிலையில் பரமசிவன் அந்த நஞ்சை விழுங்கியதைக் குறிப்பிட்டதுடன் அதற்குப் பொருத்தமாக பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் என்ற திருக்குறளை எடுத்துக்காட்டினார்.

விருது பெற்ற ராஜாராம் போன்ஸ்லே, ராஜராஜன் கட்டிய பெரிய கோவிலுக்குத் தமிழில் குடமுழுக்கு நிகழ ஏற்பாடு செய்தமையைப் பாராட்டியதுடன் ராஜராஜன் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சியை மிகவும் உணர்ச்சியுடன் எடுத்துக்கூறியபோது அனைவருமே உணர்ச்சிவயப்பட்டனர்.

ஒருநாள் ராஜராஜன் பெரியகோவிலைப் பார்வையிட்டு, பெருவுடையாரை வணங்கவந்தபோது விளக்குகள் எரியவில்லை. ஏன் விளக்குகள் எரியவில்லை என்று கேட்டபோது விளக்கெரிய வழக்கமாக நெய் வழங்கிவரும் செல்வர்கள் யாரும் நெய் வழங்காததால் விளக்குகள் எரியவில்லை என்று கூறினார். உடன் ராஜராஜன் அவர்களிடம் நெய்க்குப் பதிலாக பசுமாடுகளைத் தானமாகக் கேட்டுப்பெறுங்கள். பிறகு அந்த மாடுகளை ஏழைகளுக்கு வழங்குங்கள். அவர்கள் பிழைப்புக்கு அது உதவட்டும். அதோடு அந்தப் பசுமாடுகள் மூலம் கிடைக்கும் நெய்யை மட்டும் கோவிலுக்குக் கொடுக்கச் சொல்லுங்கள். மீதியை அவர்கள் வாழ்வுக்கு வைத்துக்கொள்ளட்டும் என்று கூறிச் சென்றுவிட்டார்.

அதேபோல் பசுமாடுகளைப் பெற்று ஏழைகளுக்கு வழங்க அவர்கள் வழங்கிய நெய்யைக் கொண்டு விளக்குகள் எரிந்தன. ஒருநாள் ராஜராஜன் வந்தபோது ஒரு பகுதி விளக்குகள் மட்டும் எரியவில்லை. வழக்கமாக அந்தப் பகுதிக்கு நெய் வழங்குபவர் நெய் வழங்கவில்லை என்று தெரிவித்தனர். அவர் வீட்டுக்கு ராஜராஜன் தன் பரிவாரங்களுடன் சென்று அவரை அழைக்க சற்று நேரம் சென்று ஒரு அம்மையார் தோளில் ஒரு சவலைப் பிள்ளையை சுமந்து கொண்டு வெளியே வர ஏன் நெய் வழங்கப்படவில்லை என்று ராஜராஜன் வினவ அந்த அம்மையார் ஆற்று வெள்ளத்திலே ராஜராஜனால் வழங்கப்பட்ட மாடுகளும் தன் கணவரும் அடித்துச் செல்லப்பட்டனர் என்று கூறினார். ஆனால் இந்த நிகழ்வுக்குப் பின்னரும் மூன்று வாரங்கள் எப்படி உங்களால் நெய் வழங்கப்பட்டது என்று ராஜராஜன் வினவ அந்த அம்மையார் கண்ணீர்மல்கத் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் தராமல் அதை விற்று நெய் வாங்கிக் கொடுத்தேன். ஆனால் இப்போது தாய்ப்பால் வற்றிவிட்டதால் கொடுக்க இயலவில்லை என்று கூற ராஜராஜன் திகைத்தான். உடனே அந்த அம்மையாருக்கு 34 பசுமாடுகள் வழங்க ஆணையிட்டான். இப்படி ஒரு நிகழ்வை அடிகளார் நெகிழ்ச்சியுடன் கூறிய போது அவையோர் உணர்ச்சிமயமாகினர். இப்படிக் கூறிய அடிகளார் விருது பெற்ற மற்ற மூவரின் சிறப்புக்களையும் கூறி அவர்களையும் வாழ்த்தினார்.

எழுதி அனுப்பியவர் : தஞ்சை திருக்குறள். ச. சோமசுந்தரம்

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – XIV

(தமிழாகரர். தெ. முருகசாமி)

தமிழக விளையாட்டுக்களுள் சிலம்பாட்டமும் ஒன்று. இதனைக் கழி ஆட்டம் அல்லது கம்பாட்டம் என்பர்.கழி, கம்பு என்பன கோல் என்ற பொருளைத் தரும்.

சிலம்பு என்பது ஒலி. இருவர் கோல் கொண்டு விளையாடும் போது ஏற்படும் காட்சி மகிழ்ச்சியைப் போலக் காதால் கேட்கும் கருவியும் ஒருவகையான ஓசையும் இனிமை பயக்கும் என்பதால் சிலம்பாட்டம் - கருவியாகு பெயரால் பெயர்பெற்றது. இவ்விளையாட்டில் கண்ணுக்குத் தெரியும் மோதுதற்குரிய கோல்களாம் கருவியும் கண்ணுக்குத் தெரியாமல் காதால் கேட்கப்படும் ஒலியும் மனக்கருத்தால் உணரப்படும் தத்துவத்திற்குப் பொருத்தமாக உள்ளதை இக்கட்டுரைத் தொல்காப்பிய உரைக் கருத்தின் வழிச் சிலப்பதிகாரத்தைச் சுவைக்க எழுதப்பட்டது எனலாம்.

எந்த ஒன்றையும் கற்றுத் தருதற்கான இடம் ஒன்று உண்டு. அதன்படிக் கம்புகளால் ஓசை எழுப்பி விளையாடும் சிலம்பாட்டத்தைக் கற்றுத்தர ஒரு பயிற்சிக்கூடம் இருந்த குறிப்பைச் சேனாவரையர் என்னும் ஓர் உரையாசிரியர் தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் கூறும் ஓர் உரைப்பகுதியால் உணரமுடிகிறது.

பெயரை வேற்றுமை செய்யும் சில எழுத்துக்களை வேற்றுமை உருபுகள் எனத் தொல்காப்பியர் சொல்லதிகார வேற்றுமையியலில் கூறுகிறார். அந்த வரையறையில் இடப்பொருளை உணர்த்தும் 7ஆம் வேற்றுமைக்குக் "கண்" என்ற சொல் உருபாகும். "ஏழாகு வதே கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (20) என்ற நூற்பாவின் உரையில் உரை ஆசிரியராம் சேனாவரையர் "தட்டுப் புடைக்கண்" வந்தான் என எடுத்துக்காட்டுத் தந்தார்.

இது தட்டுதலும் புடைத்தலுமாகிய ஓரிடத்திற்கு வந்தான் என்பதாகப் பொருள்படும். இதில் கூறப்படும் தட்டுதலும் புடைத்தலும் என்றதுதான் சிலம்பாட்டத்தைக் குறிப்பது. இதனால் சிலம்பாட்டம் நடக்கும் ஓரிடத்திற்கு என்றோ சிலம்பாட்டம் கற்றுத் தரும் ஒரு பயிற்சி. இடத்திற்கு என்றோ பொருள் கூறலாம். இவற்றுள் தட்டுதலும் புடைத்தலுமாகிய ஒன்று தான் சிலம்பாட்டம் எனத் தெளிவாகத் தெரிவதால் இத்தொடரும் தொடர்ப்

பொருளும் சிலப்பதிகாரக் கதை தழுவியதாக உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதே இக்கட்டுரையாம் என்க!

இருவர் சேர்ந்து ஆடும் இந்த விளையாட்டில் முதலில் ஒருவர் விளையாடவந்த மற்றவரின் கம்பைத் தட்டித் தம்முடன் விளையாட அழைப்பார். அவரோ அதை ஏற்கும் விதமாக விளையாட வருவதற்கான ஒப்புதலைக்கூறும் அடையாளத்திற்காக முதலில் தட்டியவரின் கம்பில் தட்டுவார், இத்தட்டுதலைப் புடைத்தல் என்பது பொது வழக்காகும்.

விளையாட்டில் ஒருவர்க்கொருவர் அடுத்தடுத்து விளையாடும் நிலையில் மெதுவாகத் தட்டுதலாய் இல்லாமல் விறுவிறுப்புடன் மாறிமாறித் தட்டும் நிலை உருவாகிவிடுவதால் அதன் காரணமாக உள்ள தட்டுதலின் வேகத்தைப் புடைத்தல் என்பதாகக் கூறுவது வழக்கமாகும். எனவே ஒருவர்க்கொருவர் தட்டிக் கொள்ளுங்கால் சினக்குறிப்பு தோன்றத் தட்டின் கொள்வது இயல்பாதலால் இருவரும் புடைத்துக் கொண்டதாகவே கூறப்படும். இதனைக் குறிப்பாக உணர்த்துவதற்காகவே தட்டுதலும் புடைத்தலும் என விளையாட்டின் தொடக்கம் அச்சொற்களால் கூறப்பட்டன.

இங்ஙனம் தட்டுதலும் புடைத்தலுமான விளையாட்டின் தொடக்கம், ஏதோ ஒரு கோட்பாட்டின் வரையறையை நினைப்பிக்கச் செய்வதாக உள்ளது எனலாம். அதுதான், ஒருவர் மற்றொருவரைத் தன்னிலைக்கு அனுபவிக்க அழைக்கச் செய்வதான ஒன்றாக உள்ளதாகும். இதனையே வேறு வகையாகக் கூறினால் - ஓர் அனுபவம் மற்றோர் அனுபவத்தை அறைகூவி அழைப்பதான கருத்தாக உணரலாம் என்க!

அந்த வகையில் இக்கருத்தைச் சிலப்பதிகாரக் கதையோடு பொருத்தி உணர்கையில், சிலம்புத் தொடர்பாகக் கண்ணகிக்கு ஏற்பட்ட கணவனை இழந்த இழப்பானது சிலம்பு காரணமாகவே பாண்டிமா தேவி தன் கணவனை இழக்கப்போகும் அவலத்தை அறைகூவி அழைப்பதான பொருத்தத்தை நினைப்பிக்கச் செய்வதாக உள்ளது.

அதாவது சிலம்பாட்டத்தில் முதலில் தட்டியவருக்கு எதிராளியான மற்றொருவர் அத்தட்டுதலை ஏற்று அதற்குப் பதில்தரும் விதமாகவே எதிர்புடைத்தல் என்பது வெளிப்படையாகத் தெரிவது போலச் சிலப்பதிகாரக் கதைப் பொருத்தத்தில் வெளிப்படையானதோர் இழப்பு, இன்னோர் இழப்பை வெளிப்படையாய் அறைகூவுவதாக அறியப்படவில்லை யானாலும் கதைப்போக்கின்படி அதுவே உண்மையாதலால் நாடக உத்தி இலக்கணப்படி (DRAMATIC TECHNIQUE) மறைபொருளாக நினைப்பிக்கச்

செய்கிறது என்பது கருத்து. மேலும் இந்த நாடக உத்தியான ஒருவர்க்கொருவராக உணரப்படும் இழப்பு – அதன் எல்லையைக் கடந்த உலக அளவிலான (Universal) பொது இழப்பின் நிரந்தர அழைப்பிற்கு அடிகோலும் வண்ணம், ஈண்டுள்ள பாத்திர உரையாடலும் பாதிறப் பதிவும் ஒன்றை ஒன்று விஞ்சச் செய்வதான தட்டுப்புடையலாம் சொற் சிலம்பாட்டத்தை இளங்கோ ஒருவராகவே இருந்து ஆடுவது வியப்பினும் வியப்பாக உள்ளது எனலாம்!

அதாவது, கண்ணகி – பாண்டிமாதேவியராம் இருவர் அளவில் காணப்படும் கணவர்களை இழந்த இழப்பு, உலகப் பொதுமைக்கு உரியதாக்கிவிட்டதால் சிலம்பாட்டத்தின் வெளிப்புறக் காட்சி இலக்கிய நாடக உத்தியாக மலர்ந்து மானுடத்தை உணர வழிவகுத்துவிட்டது எனலாம்.

இதனால் தொல்காப்பிய நூற்பாவைப் போல அதன் உரைப்பாங்கும் சிலப்பதிகாரப் பொருத்தத்தைக் கதை தழுவும் நிலையில் பொருத்தி உணருமாறு செய்வது நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்ற பாரதி வரிக்கு வலுச்சேர்ப்பதாகவும் ஆகிறது எனலாம்!

ஈண்டு கண்ணகி – பாண்டிமாதேவியரின் கணவர்களின் இழப்பு, உலகத்தில் மகளிர்கள் தம் கணவர்களை இழப்பதான அவலப் பொதுமையை இளங்கோ எவ்வாறு உணர்த்தினாரெனில், “கணவரை இழந்தோர்க்குக் காட்டுவதில்” எனப் பாண்டிமாதேவி கூறி இறப்பதன் காட்சிவழி உணர்த்தினார் என்க!

கணவனை இழந்தாள் கடையகத்தாளே – என வாயிற்காப்போன் கூறக் கேட்டபோதும் “நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி” எனக் கண்ணகி மன்னனிடம் கூறக்கேட்டபோதும் கணவனை இழந்த ஒருத்தியின் மனநிலையை உணரமுடியாதவளாகக் கணவனாம் மன்னன் பாண்டியனது அருகிருந்து கேட்ட பாண்டிமாதேவி, தன் கணவன் “கெடுக என் ஆயுள்” எனக் கூறி இறந்ததைக் கண்டதும்தான் கணவனை இழக்கும் எந்தப் பெண்ணுக்கும் அமைதி கூறமுடியாதென்ற அவலப் பொதுமையைப் பாண்டிமா தேவியின் வாயிலிருந்தே இளங்கோ பிரகடனப்படுத்திய ஒன்று தான் – ஓரிழப்பு மற்றோர் இழப்பைத் தொட, அது உலக இழப்பின் அவலப் பொதுமையாகத் தொட்டுத் தொடரச் செய்வதன் மூலம் அச்சிலம்பாட்டத்தின் விஞ்சிய செற்சொற் சிலம்பாட்டமாக உள்ளது எனலாம்!

இங்ஙனம் இழப்பின் வகையால் ஓர் அனுபவம் இன்னோர் அனுபவத்தைக் கூவியழைத்ததைப் போலப் பிரிவுக் கொள்கையைக் கோவலனும் மாதவியும் யாழ் வாசிப்பதன் மூலம் தட்டுப்புடையலான



திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்ய அனுமதி வழங்கும் இந்து அறநிலையத்துறை உயர்மட்டக்குழுவின்
வேத ஆகம ஆலோசனைஉறுப்பினராக சென்னை உயர்நீதிமன்றத்தால் நியமணம்
பெற்ற சிவத்திரு. பிச்சை சிவாச்சாரியார் குருமகாசந்நிதானம் அவர்களிடம் வாழ்த்து பெற்ற போது,
உடன் திரு தனபால் (இணை ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை, சிவகங்கை) மற்றும்
சிவத்திரு சோமசுந்தர சிவாச்சாரியார் அவர்கள்



சென்னை புத்தக விழாவில் தமிழக துணைமுதல்வர் மாண்புமிகு ஓ. பன்னீர் செல்வம்
அவர்களிடம் ஆனந்த விகடனில் தொடராக எழுதிய அன்பே தவம் நூலின் பிரதியை வழங்கியபோது,
உடன் முன்னாள் அமைச்சர் திரு வைகைசெல்வன், கவிதா திரு சேது சொக்கலிங்கம் அவர்கள்



திருக்கார்த்திகை தீப வழிபாடு



திருக்கார்த்திகை வழிபாடு



திருக்கார்த்திகை பரணி தீபம்



திருக்கார்த்திகை சொக்கப்பனை



திருக்கார்த்திகை திருக்கோயில்
தீப வழிபாடு



ரூ.70 லெட்சம் மதிப்பீட்டில் பிரான்மலை
தேரோடும் வீதியில் தார்சாலை அமைக்கும் பணி
- பார்வையிடல்



ரூ.70 லெட்சம் மதிப்பீட்டில் பிரான்மலை
தேரோடும் வீதியில் தார்சாலை அமைக்கும் பணி
பார்வையிடல்



குன்றக்குடி திருக்கோயில்
முன்பு கபசுர குடிநீர் வழங்குதல்



குன்றக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில்
மரக்கன்றுகள் நடுதல்



குன்றக்குடி மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு
மாவட்ட ஆட்சித்தலைவர் சைக்கிள் வழங்குதல்.

சொற்சிலம்பாட்டத்தைக் கொண்டு இளங்கோ நிறுவுவதைக் காண்போமாக!

சித்திரைத் திங்களில் நடந்தேறும் இந்திர விழாவைக் காணக் கோவலனும் மாதவியும் கடற்கரைக்குச் சென்று புன்னைமர நிழலில் ஓவியம் வரைந்த துணிப்பந்தர் கீழ் இருந்தனர். இதுபற்றிக் கூற விழையும் இளங்கோவடிகள் "கோவலன் தன்னொடு தானும் கொள்கையின் இருந்தனள்" என இருவரின் இருப்பைக் கூறினார்.

ஈண்டுக் கோவலனோடு மாதவிதானும் ஏதோ ஒரு கோட்பாட்டோடே இருந்ததாகக் கூறியதில் தான் தட்டுப் புடைத்தலான சிலம்பாட்டத்திற்குக் களம் அமைத்தார் இளங்கோவடிகள் என எண்ணத் தோன்றுகிறது.

பொதுவாகச் சிலப்பதிகாரத்தில் பிரிவுகள்தாம் பிரதானமாகும். ஒரு பிரிவு இன்னொரு பிரிவைத் தொட்டுத் தொடருவதாகவே காப்பியம் முழுவதிலும் அமைந்தாலும் சிறப்பாக அப்பிரிவை நிலையானதாக உணரக் கோவலன் – மாதவி) இருவரும் யாழ் வாசிப்பிலான நெருடலால் பகலன்ன வாய்மையாகத் தெரிகிறது.

இந்திரவிழாவை அனுபவிக்கும் நிலையில் கோவலனும் மாதவியும் நெய்தலம் கானத்தைத் தான் வரிப்பாடலாகப் பாடவேண்டும் என ஒற்றுமையான நினைப்பில் இருந்தாலும் முதலில் பாடிய கோவலனது பாட்டின் பொருள், மாற்றுத் தொனியாக உள்ளதாய் உணர்ந்த மாதவி, "தானும் ஒரு குறிப்பினள்போல்" கானல்வரி பாடினாள். இந்த இருவரின் தட்டுதலும் புடைத்தலுமான பின்னல் போன்ற மின்னல் ஒளிர்ப்பில் ஒலித்ததுதான் இருவருக்குமான "பிரிவு" ஆகும்.

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி எனப் பாடிய கோவலனது பாடல் – இயல்பானதாக இருந்தாலும் அது ஏதோ ஒரு பிரிவை நோக்கிப் பயணிக்கப் போவதான உத்தியைத் தந்துவிட்டது. இந்த உத்தியின் நுட்பத்தை மாதவி சிறப்பாக மோப்பம் பிடித்து உணர்ந்ததால்தான் "தானும் ஒரு குறிப்பினள்போல்" பாடத் தொடங்கினாள் என்றார் இளங்கோவடிகள்.

முதலில் கோவலன் பாடத் தொடங்கியபோது, "மாதவி மனமகிழப் பாடினான்" என்கிறார் இளங்கோ. இதனைக் கேட்டவள் கோவலன் மனமகிழப் பாடாமல் நீள்நிலத்தோர் மனம்மகிழப் பாடியதாக இளங்கோ கூறினார்.

அடுத்து, பாடத் தொடங்கும்போது கோவலன் இயல்பாக யாழை வாங்கி வாசித்துப் பாடினான். அப்பாடலைக் கேட்டு மனம் மாறிய மாதவி இயல்பாக யாழை வாங்காமல் ஊடல் கொண்ட மனத்தோடே வாங்கினாளாம். இதுபற்றிக் கூறும் போது "கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ் வாங்கி" என்கிறார் இளங்கோ. இதனால் அவளது மன உணர்வும் மெய்ப்பாடும். உண்மையல்லா உண்மையான போலிமையை உணர்த்தின எனலாம்!

போலிமையான இக்கருத்துத் தொடர்ச்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பார்போல இளங்கோ, கவிக்கூற்றாகக் கூறும்போது "உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை நெகிழ்ந்தனன்" என்கிறார். கூறப்பட்ட உவமையின் பொருள், பொருள் பொதிந்த ஒன்றாகும். மாதவியின் உள்ளத்தில் ஏற்பட்ட நெருடல்கள் வெளிப்படையாக இருந்ததென உணர்தற்கேற்றவாறாகவே இளங்கோ அகத்தே கருத்து புறத்தே வெளுத்ததை முழுநிலா நாளில் வெளிப்படையாகத் தெரியும் களங்கத்தை நினைப்பிப்பதன் மூலம் தெரிவிப்பதால், கோவலன் "யான் கானல்வரிபாட, மாயத்தாள் தான் ஒன்றின் மேல் மனம் வைத்துப் பாடினாள்" எனச் சிலம்பாட்டத்தில் தான் இயல்பாகத் தட்ட, மாதவியோ புடைத்து ஆடத் தொடங்கினாள் என அவன் நினைத்ததாக இளங்கோ காட்சிகளையும் உரையாடல்களையும் அமைத்ததை எளிதாகக் கருதிவிட முடியாது.

சுருக்கமாகக் கூறினால் இக்கதை நிகழ்வைக் கூறிவரும் நிலையில் கோவலனைப் பற்றிக் கூறியதையும் மாதவியைப் பற்றிக் கூறியதையும் ஒப்பிட்டுணர்ந்தால் கோவலனைவிட மாதவிக்காகக் கூறிய சொற்களும் பொருள்களும் வெதுவெதுப்பானவை என உணரமுடியும். இந்த அடிப்படையில் தட்டுதலும் புடைத்தலுமான சிலம்பாட்டத்தை இளங்கோவடிகளே களம் அமைத்துக் கற்றுத்தரும் பயிற்சிகூட ஆசானாக விளங்குகிறார் என அவ்ரைப் புதிதாகப் பாராட்டலாம் என்க!

ஆக சிலப்பதிகாரக் கதை தழுவிய அளவில் மேற்படியான கருத்துப் பொருத்தங்களெல்லாம் சேனாவரையரின் "தட்டுப் புடைக்கண் வந்தான்" என்ற ஒருசொல் நடையால் விளக்கமுறுதலால் தொல்காப்பிய நூற்பாவும் அதன் உரையும் பருந்தும் நிழலும்போல, பாட்டும் எழாலும் (இசை) போல ஒன்றியைந்து உணரத் தக்கதாயுள்ளன எனலாம். இதனால் சிலப்பதிகாரத்திற்குள் இளங்கோவடிகளின் சொற்சிலம்பாட்டத்தின் ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதை மேற்படிக் கட்டுரையால் உணரலாமன்றோ!

தமிழாளி! தமிழ்ச்செம்மல் அய்க்கண் தானே!

(தமிழாகரர். தெ. முருகசாமி)

1. படைப்பாளி! படிப்பாளி! பசுந்த மிழ்க்காம்
பங்காளி! பண்பாளி! பைந்த தமிழ்க்குக்
கொடையாளி! விருதாளி! கோபம் இல்லாக்
கொஞ்சுதமிழ்ப் பேச்சாளி! நாளும் சீரார்
நடையாளி! நற்றமிழ்சேர் வித்த கத்தின்
நயமான நட்பாளி! தண்ட மிழ்க்குத்
தடையாளி யானவரைத் தட்டிக் கேட்கும்
தமிழாளி! தமிழ்ச்செம்மல் அய்க்கண் தானே!

2. திருப்புத்தூர்க் கல்லூரிப் பேரா சானாய்த்
திகழ்ந்திட்ட போதந்தோ தீராக் காதல்
விருப்பாலே தீந்தமிழில் பல்லாற் றானும்
விறுவிறுப்பாய்ப் படைத்தளித்தார் நூல்கள் தம்மை!
இருப்பான தமிழகத்தின் ஆட்சி யாளர்,
இருந்தமிழ்நற் சார்புடைய சங்கத் தார்கள்
விருப்பமுடன் அளித்தார்கள் பாராட் டெல்லாம்
விண்முட்ட விஞ்சினவே புகழுந் தானே!

3. நாட்டாராம் அம்பலமாம் மக்கள் தம்மை
நன்னிலையில் உயர்த்துதற்குப் பாடு பட்டார்!
தீட்டாத தீந்தமிழின் ஏடும் உண்டோ?
தினந்தினமும் எழுத்தாலே வாழ்ந்து வந்தார்!
வீட்டாளாம் வசந்தாவாம் இல்லத் தாளின்
விடுதலைக்குப் பின்னரவர் ஓய்ந்து விட்டார்!
பாட்டாலே அவர்வாழ்வைப் பாடு தற்குப்
பரந்துபட்ட அவர்பெருமை வரலா றன்றோ!

4. குன்றக்குடி நந்தவனக் கூட்டம் என்றால்
குன்றக்குடி அடிகளவர் தந்த அந்த
என்றுமுயர் நற்கதையாம் நம்பி யாக
எல்லோர்க்கும் முன்னாலே வந்தி ருப்பார்!
மன்றுபுகழ் கோவிலூராம் ஆதீ னத்தார்
மதித்திடும்நல் மானுடத்தின் நேயம் மிக்கார்!
என்றும்தமிழ் எழுத்தாளர் சங்கத் தேரை
எல்லோரும் பாராட்ட ஓட்டிச் சென்றார்!

5. காரைக்குடி பேர்சொல்லும் கம்ப னுக்காம்
கழகத்தின் செயலாள ராகத் தக்கார்
யாரையுமே அழைத்துவந்து வீறு சேர்க்கும்
யதார்த்தத்தின் பொறுப்பாலே நல்ல வண்ணம்
பேரைத்தான் சேர்த்ததுடன் ஆண்டு தோறும்
பெரிதான புத்தகத்திரு விழாவைச் செய்தே
ஊரைத்தான் நாட்டைத்தான் படிக்க வைத்தார்!
உத்தமராம் பச்சைத்தமிழ் அய்க்கண் தானே!

6. எங்களதாம் இராமசாமி தமிழ்க்கல் லூரி
எந்தவிழா வானாலும் வந்து வாழ்த்தும்
சிங்கமவர்! இந்துமத அபிமா னம்சேர்
சிங்காரச் சங்கத்தின் பொறுப்பும் ஏற்றே
எங்குமுள தமிழமைப்பின் நிகழ்விற் கெல்லாம்
எளிமையுடன் கலந்துகொண்டு வாழ்த்து சொல்லும்
தங்ககுண அய்யாவாம் அய்க்கண் என்னும்
தகையாளர் மறைந்ததினால் தவிக்கின்றோமே!

7. அன்னார்தாம் நம்மோடே இருப்பார் போல
அருகுவந்தே நம்மிடத்தில் சொல்வா ராக,
மின்னார்ந்த வாழ்க்கையிது! சேர்த்த எல்லாம்
மிடுக்காக இருந்ததுபோல் மெலிந்து போகும்!
எந்நாளும் இறப்புவரும்! ஆத லாலே
எதிர்காலம் என்றெதையும் தள்ள வேண்டாம்!
இந்நாளே நல்லதொன்றைச் செய்து விட்டால்
இறப்பாலே பிறந்தகடன் தீரு மன்றோ!

வாழி! அவர்புகழ்!
அய்க்கண் எழுத்தெல்லாம்
சூழிய மெய்க்கண்ணாய்
மேதினியில் - ஊழி
உளதமிழ்போல் அய்க்கணும்
வாழ்வார்! உலகோர்
உளத்துள் உறைவார்
உவந்து!

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம்

கரோனா நிவாரண உணவுப் பொருள்கள் & திருக்கை வழக்கம்

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கரோனாவால் அல்லற்படும் மக்களுக்கு உதவும் வகையில் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் திருவருள்திரு குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் குன்றக்குடி வாழ் மக்களுக்கு 28.4.2020 ஆம் நாள் உணவுப் பொருள்கள் வழங்கினார்கள்.

குன்றக்குடியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கும் இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு. J.ஜெயகாந்தன் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் கரத்தால் இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வழங்கப்பெற்ற உணவுப்பொருள்கள் :

1. மஞ்சள் தூள்
2. அரிசி
3. ரவை
4. கடுகு
5. சீனி
6. சீரகம்
7. பாசிப்பருப்பு
8. கடலைப் பருப்பு
9. துவரம் பருப்பு
10. கோதுமை மாவு
11. வெந்தயம்
12. கோல் சன்பிளவர் ஆயில்

இவை மட்டும் அல்லாமல் ஆதீனத்தின் ஐந்து கோயில் பணியாளர்கள் அனைவருக்கும் குருமகாசந்நிதானம் அவர்கள் நேரில் சென்று இந்த உதவி வழங்கப்பட்டன.

2500 முகக்கவசங்கள் (Mask) தயார் செய்து கிராம மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

ஊரடங்கு காலத்தில் சுமார் 45 நாட்கள் ஆதீனத்தின் சார்பில் 65 நபர்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்கள் நாள்தோறும் வழங்கப்பட்டன.

சுமார் 15 நாட்கள் நாள்தோறும் "கபசுரக்குடிநீர்" தயார்செய்து குன்றக்குடி கிராம ஊராட்சிப் பகுதியிலுள்ள மக்கள் அனைவருக்கும் ஆதீனம் சார்பில் வழங்கப்பட்டது.

அள்ளிக்கொடுத்த அழகன்

சொ. அருணன்
(முனைவர் பட்ட மேலாய்வாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி)

வள்ளல் என்னும் சிறப்பு தமிழுக்கே உரிய தனித்த அடையாளம். மூவேந்தர்களுக்கு இணையாகப் பெரும்புகழ் கொண்டவர்கள் வள்ளல்களே. படைப்பெருமையை வாழ்வின் புகழ் என்று கருதிக் கொண்டிருந்த காலத்திலேயே கொடைப்பெருமை அதனினும் பெரிது என்று மானுடத்தை உயர்த்திச் சமுதாயத்தைச் செம்மைப்படுத்தியவர்கள். வீரத்தினும் பெரிதான கொடைப்புகழை முதன்மையாகச் சுட்டி அதுவே உயிர்க்கு ஊதியம் என்று உயர்த்திக்காட்டினார் பொய்யாமொழிப் புலவர்.

கலையும் இலக்கியமும் தமிழில் செழித்தோங்கத் தம்மையே தந்த பெருங்குணத்தவர்கள். அதனால்தான் மற்றவர்கள் வரலாற்றை எழுதிக் கொண்டிருந்த காலத்தில் வரலாறே இவர்களைத் தன்பெயராகப் பதிந்து கொண்டது. தமிழிலக்கியம் முதல், இடை, கடை என்னும் மூன்று ஏழு வள்ளல்களை – வள்ளன்மையை வாழ்வியல் வரலாற்றுப் பாடமாக்கித் தலைமுறைக்கும் கற்றுத் தந்து கொண்டிருக்கிறது. அதனால் அந்த வள்ளல் வரிசை காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டேதான் வருகிறது. அவர்களால் காலந்தோறும் இலக்கியமும் மொழியும் சமுதாயமும் தன்னை மேம்படுத்திகொள்கிறது.

பக்தி மார்க்கத்தில் சிறந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் தொடங்கி, கம்பனுக்கு வாய்த்த சடையப்பரும், "எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியாத" தாயுமானவப் பெருந்தகையாரும், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய" வள்ளற்பெருமானும், உமறுப்புலவருக்கு வாய்த்த சீதக்காதியும் போல வள்ளல்கள் தோன்றிக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

அத்தகு வள்ளல்கள் வாழ்வையே வரலாறாக்கி – தாங்கள் கண்ட கனவுகளையும் நனவாக்கிவிடுகிறார்கள். அந்த வரிசையில் வந்துதித்தவர்தான் வள்ளல் அழகப்பர். வட்டிக் கணக்குப் பார்க்கிற வழக்கத்தில் தோன்றிய அவர் வாழ்க்கைக் கணக்கைச் சரியாகப் புரிந்து கொண்ட காரணத்தினால் ஏழு தலைமுறைக்கும் நிலைத்து நிற்கும் கல்வியைக் கொடையாக வழங்கிப் பெருமை பெற்றார்.

விதை சரியாக விதைத்தால் விருட்சம் வீரியமாய் வளரும் என்பது போல, நிறைந்த செல்வமும் அறிவும் இருந்தும் கல்வி கற்பதற்காகத் தன் இளமையில் போராடிய அழகப்பருக்குக் கல்வி பெறவியலாதவர்களின் துயரம் மனத்தில் பதிந்து போனது. பல தொழில்கள் செய்து ஈட்டிய செல்வத்தையெல்லாம், சமுதாயத்தை வளமாக்கும் கல்வித் தொண்டுக்கே கொண்டு வந்து குவித்தார்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வியே ஏழு பிறவிகளுக்கும் தொடருமென்றால் – ஒருமைக்கண் தான் ஊட்டிய கல்வி எத்தனை பிறவிகளுக்குப் பயன் தரும்? பயன்மரம் உள்ளூர்ப் பழுத்த விந்தையும் – ஊருணி நீர் நிறைந்த புகழும் பேரறிவாளன் திருவாய்க் காரைக்குடிக்குச் சேர்ந்தது வரலாற்றுப் பெருமிதம். "இம்மைச் செய்தது மறுமைக்காம்; எனும் அறவிலை வாணிகன் ஆய்அலன்" என்னும் புறநானூற்றுப் பொன்வரிகள் அழகப்பருக்கே இயற்றப்பெற்றவை போலும்.

1943ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை ஏற்படுத்துவதற்காக ஒரு இலட்ச ரூபாய் நன்கொடை வழங்கியபோதே அவருக்குள் ஒரு கல்விக் கனவு துளிர்விட்டது. இந்திய விடுதலைக்கு ஒரு மாதம் முன்னராக 1947 ஜூலையில் சென்னை அடையாறில் பிரம்மஞான சங்கத்தில் அன்னிபெசண்ட அம்மையாரின் நூற்றாண்டு விழா நடைபெற்ற வேளையில் அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர்.ஆ. இலக்குமணசமி, "தமிழகத்துச் செல்வந்தர்ள் புதிய கல்லூரிகள் நிறுவப் பொறுப்பேற்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். அந்த விழாவின் குழுவுக்குத் தலைமையேற்றிருந்த அழகப்பருக்கு தனக்குள்ளே கனன்று கொண்டிருந்த அந்தக் கல்விக் கனவு விழித்துக் கொண்டது. தனது மாவட்டத்தில் உடனே ஒரு கல்லூரி நிறுவுவதாக வாக்களித்தார். அடுத்த மாதமே – இந்தியா சுதந்திரம் அடைந்த அதேநாளில் – காரைக்குடியில் அழகப்பா கல்லூரி தொடங்கப் பெற்றது. எண்ணிய எண்ணியாங்கு எய்துகிற அழகப்பரின் திண்ணிய வள்ளன்மை அன்றே புலப்பட்டது.

காரை எனும் மண்வகை நிறைந்த பூமி காரைக்குடி. விளைச்சல் ஏதும் இல்லாத பாலைநிலப்படுகை. அங்கே அழகப்பர் கல்விப் பயிரைத் தன் கனவென்னும் நீர் ஊற்றி ஊன்றி விதைத்தார்.இ தனை, வ.சுப.மா., "நிலமகள் கைவிட்ட நீள்கரத்தை வீட்டுக் குலமகள் போலக் குறித்தான்" என்றும், "நரியிசைத்த காடு நகராச் சிலம்பின் வரியிசைக்கப் பள்ளி வகுத்தான்... பாம்பாடிடமெல்லாம் பந்தாடிடமாகும் தாம்பாடு கன்னியர்க்குத்தாம்" என்று போற்றிப் பாடுவார்.

சிறுபஞ்சமூலம் குளம் வெட்டுதலையும், மரம் நடுதலையும், சாலைகளை அமைத்தலையும், பாழ்நிலங்களை மேம்படுத்தி விளைநிலங்களாக்குவதையும், நீர்நிலைகளை உண்டாக்குவதையும் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் கொடைவாயில்களாகக் குறிப்பிடுகின்றது.

காரைக்குடிப் பகுதியில் அழகப்பருக்கு முன்னாள் வரை இந்தச் செயல்களே பெரும்பாலும் நடைபெற்று வந்தன. இந்த அறங்களுக்கு மேலான ஒரு புதிய அறத்தைப் பாரதி விதைத்தார். அது அன்ன சத்திரங்கள் ஆயிரம் வைப்பதிலும், ஆலயங்கள் பதினாயிரம் நாட்டுவதிலும் சோலைகள் உருவாக்குவதிலும் கிடைக்கிற புண்ணியங்களைவிடக் கோடி மடங்கு பெரியது ஓர் ஏழைக்கு எழுத்தறிவிக்கத் துணியும் செயலாகும். அழகப்பர் அந்த எழுத்தறிவிக்கும் தொண்டினை மேற்கொண்டார். வள்ளல் அழகப்பருக்கும் "கோடி கொடுத்த கொடைஞன்" என்ற சிறப்பு உண்டு. ஆனால் அது காகிதத் தாள்களால் ஆனகோடியன்று. பாரதியார் குறிப்பிட்ட ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்னும் ஞானதானத்தினால் பெற்ற புண்ணியத்தால் பெற்ற கோடி. அந்தக் கோடியையும் கொடையாகவே தந்து விட்ட கொடைவள்ளல் அழகப்பர். வயிற்றுக்குச் சோறும், பயிற்றிப் பலகல்வியும் வாழும் மனிதருக்கெல்லாம் என்ற பாரதியின் கனவு வள்ளல் அழகப்பரால் காரைக்குடியில் நிறைவேறியது.

கல்வி ஏட்டோடு நின்றுவிடுவதில் அழகப்பருக்குச் சம்மதமில்லை. அது செயல்படச் சாலைகள் வேண்டாமா? அந்த வேளையில் மத்திய அரசு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பெரிய நகரங்களில் நிறுவத் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. தன் கல்விக் கனவின் நீட்சியாக அழகப்பர் தலைநகரம் சென்று ஜவஹர்லால் நேருவைச் சந்தித்து மத்திய மின்வேதியியல் நிலையம் காரைக்குடியில் அமைக்கத் தேவையான உறுதிகளைத் தந்து ஒப்புதல் பெற்றார். அப்போதுதான் அவருக்குச் "சமதர்ம முதலாளி" என்னும் சிறப்புப் பெயர் கிட்டியது. 1948 ஜூலை 25-இல் காரைக்குடிக்கு நேருவே வந்து அதைத் திறந்து வைத்தார்.

அந்த விழாவின் வரவேற்புரையில்தான் அழகப்பர் தனது கனவுகளின் பிரம்மாண்டத்தை வெளிப்படுத்தினார். ஆண்டுக்கு ஒன்று குறையாத பள்ளியோ, கல்லூரியோ திறக்கப்படும் என்பதுதான் அது. அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அழகப்பா பொறியியற் கல்லூரி, அழகப்பா பலதொழில் கல்லூரி, அழகப்பா உடற்கல்விக் கல்லூரி, அழகப்பா மாண்டிசோரிப் பள்ளி, அழகப்பா மாதிரிப் பள்ளி, அழகப்பா

ஆயத்தப் பள்ளி, அழகப்பா தொடக்கநிலைப்பள்ளி என அவரது கனவுகள் 1948 – 56க்குள் வேகமாக நனவாகத் தொடங்கின. எல்லாவற்றையும் அறக்கட்டளையால் ஒருங்கிணைத்தார்.

இயற்றல் – ஈட்டல் – காத்தல் – வகுத்தல் ஆகியன ஓர் அரசுக்குரிய செயல்கள் என்பார் திருவள்ளுவர். அழகப்பர் அத்தகைய ஓர் அறஆட்சி செய்தார். பங்கு, வங்கி, ஆலை, வேளாண்மை, விடுதி, திரைத்துறை பதிப்பு, விமானப் போக்குவரத்து காப்பீடு என அத்தனை துறைகளிலும் தனது மதிநுட்பத்தைக் கொண்டு திட்டங்கள் இயற்றிப் பொருளை ஈட்டியவர் அழகப்பர். ஆனால் அதைக் காத்ததும் வகுத்ததும்தான் வரலாற்றுச் சிறப்பு. 1952 அக்டோபர் 25-ல் சென்னை முதலமைச்சராக விளங்கிய இராஜகோபாலச்சாரியார் அழகப்பா கல்லூரிப் பேரவையில் உரையாற்றியபோது, "பணம் சேர்க்கின்ற ஒருவழியே பலருக்குத் தெரியும். சேர்த்த பணத்தை எல்லார்க்கும் பகுத்து வழங்குகிற மறுவழி ஒருவருக்கும் தெரியாது. இருவழியும் தெரிந்து தெளிந்தவர் வள்ளல் அழகப்பர். ஈத்துவக்கும் இன்பம் கண்ட மேதை" என்று போற்றினார். இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்ட அந்த வள்ளல் தன்னைத் தந்த மண்ணுக்கு தன்னோடு வாழ்ந்த மனிதர்களுக்கு என்றைக்கும் நிலைத்து நிற்கக் கல்விச் செல்வத்தை வாரி வழங்குவதற்காகவே அவற்றையெல்லாம் வகுத்துவிட்டார். பட்டியலில் அடங்காத அவரது கொடைகளை விடுத்து விட்டுத் தனித்துக் கண்டால் அவரது நனவாகிய கனவாக –பல்லாயிரக்கணக்கான குடும்பங்களில் கல்வி விளக்கினை ஏற்றிவைத்த – அவர் பெயரிலான அழகப்பா பல்கலைக்கழகம் ஒன்றே நல்ல சான்று.

இன்று இப்பல்கலைக்கழகம் நான்கு புலங்கள், 34 துறைகள், 3 உறுப்புக் கல்லூரிகள், 39 இணைப்புக் கல்லூரிகள் எனப் பரந்து தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களில் முதலிடமும் தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தரமதிப்பீட்டில் 'A+' 3.64 GPR என்னும் தகுதியும் பெற்று மேலும் வளர்ந்து வருகிறது. "செயலிற் செம்மை" என்பது அழகப்பரின் தாரக மந்திரம். அந்தச் செம்மை இன்றும் பொலிவுறுகிறது.

தமிழ்த்தாத்தா உ.வே.சா.வின் மாணவர், சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் வகுப்புத் தோழர். மகாத்மா காந்தியின் அணுக்கத் தொண்டர். பண்டித ஜவஹர்லால் நேருவின் இனிய நண்பர் என்று தம் காலத்தில் உடன்வாழ்ந்த உயர்ந்தோர்கள் பலரும் புகழ்ந்து கொண்டாடுகிற நிறைவு அவருக்குக் கிட்டியது. இந்திய தேசம் விடுதலை பெற்ற வேளை – புதிய இந்தியாவை உருவாக்குவதற்குக் கல்விதான்

தக்கவழி என்று உய்த்துணர்ந்து அதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட வள்ளல்.

பல விருதுகளையும் பெற்ற அழகப்பருக்கு வள்ளல் என்னும் பட்டத்தைச் செட்டிநாட்டரசர் அளித்தபோது, புகழுக்கு நாணி, தன்னைக் "குட்டி வள்ளல்" என்று அழைத்துக் கொண்டார். 1953ஆம் ஆண்டில் பாரி வாழ்ந்த பறம்புமலையிலே தவத்திரு குன்றக்குடி அடிகளார் தோற்றுவித்த பாரிவிழாவில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் சார்பில் அவருக்கு வள்ளல் விருது வழங்கப்பெற்றது. பாரியாகவே அவரைத் தேரில் அமர்த்தி ஆடுநர்க்கும் பாடுநர்க்கும் பரிசில் அளிக்கச் செய்தது அவர் வாழ்வையே பிரதிபலிப்பதாக ஆயிற்று.

தனக்கொரு ஆண்வாரிசு இல்லையே என்று அவர் வருந்தியதேயில்லை. பிறர் அவரிடம் வருந்தியபோது, "கல்வி நிறுவனங்களில் படிக்கிற பிள்ளைகள் எல்லாம் எனது குழந்தைகள்தானே" என்று தழுவிக்கொண்ட பேருள்ளம் வள்ளலுடையது.

மழலை வகுப்பினிலே ஒரு குழந்தை அடியெடுத்து வைத்துவிட்டால் போதும், வள்ளல் அழகப்பர் அமைத்துத் தந்திருக்கிற கல்விப் படிக்கட்டுகளில்ஊக்கமாக அது பயணித்துப் பல்கலைக்கழக மேற்கல்வி வரையிலும் முறையோடு கற்று உலகத்தை உள்ளங்கையில் வைத்துப் பார்க்கும் பக்குவம் பெற்றுவிடும். இந்த அதிசயம் காரைக்குடியில் நிகழும். அதனால்தான் வ.சுப.மா. இப்படிப் பாடினார்.

கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த
வீடும் கொடுத்த விழுச்செல்வன் - தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன் அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு

இந்தக் கீதம் இன்றும் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொருநாள் காலையிலும் உரத்து ஒலிக்கிறது. பொன்னையும், பொருளையும் மட்டுமல்லாது, கல்வியருளை அள்ளிக்கொடுத்த அந்த அழகப்ப வள்ளலின் பெருமைகள் மேலும் ஓங்கட்டும்.

ஏப்ரல்-6 வள்ளல் அழகப்பர் பிறந்தநாள்.

(ஏப்ரல்-5 அவரது நினைவுநாள்)

குன்றக்குடிஆதீனம் மதுரைக்கிளையின்
கௌரவ முகவர்

எஸ். சுப்பிரமணியன் அவர்கள்

சிவனடி சேர்ந்தார்



குன்றக்குடி ஆதீனம் மதுரைக்கிளையின் கௌரவ முகவரும், சிறப்பாசிரியர் அவர்களின் பூர்வாசிரமத் தந்தையாருமான திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் உடல் நலமில்லாமலிருந்து 17.4.2020 அன்று மதுரையில் அவர்தம் இல்லத்தில் சிவனடி சேர்ந்தார்.

இப்பெருமகனார் வழிவழி சைவசீலம் நிறைந்த நற்குடும்பத்தில் தோன்றியவர். 45ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் காலம் முதல் தம் ஆயுள்காலம் வரை திருமடத்தின் பணிகளைச் சிறப்பாக ஆற்றி வந்தவர். இவரது இரண்டாவது தவப்புதல்வரான குன்றக்குடி ஆதீனம் 46ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் பூர்வாசிரமத் தந்தையாராகும் அரிய பேறு பெற்றவர். அவர்தம் நீண்டகால ஆதீனத் தொண்டு பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்குமுரியது. அப்பெருமகனாரின் மறைவு, அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆதீனத்திற்கும் பேரிழப்பாகும். அப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சிவப்பேறடைந்த அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடிநீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கிறது.

எழுத்தாளர். பேராசிரியர். மு. அய்யாக்கண்ணு காலமானார் (அய்க்கண்)



பேராசிரியர் திரு. மு. அய்யாக்கண்ணு (அய்க்கண்) அவர்கள் உடல்நலமில்லாதிருந்து காரைக்குடியில் அவர் இல்லத்தில் காலமானார். திருப்புத்தூர் ஆ.பி.சீ.அ. கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றிய இவர் "அய்க்கண்" என்ற புனைபெயரில் பல புதினங்களும் சிறுகதைகளும் எழுதியவர். நாடறிந்த எத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். தமிழக அரசின் "கலைமாமணி" விருது, குன்றக்குடி ஆதீனத்தின் "நற்கதை நம்பி" பட்டம், "எழுத்து வேந்தர்" பட்டம் ஆகியவற்றையும் பல இலக்கிய அமைப்புகளின் பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெற்றவர்.

சிவகங்கை மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்தும் காரைக்குடி புத்தகக் கண்காட்சிப் பணியை முன்னின்று நடத்தியும் பல்லாண்டுகள்சிறப்பாகப் பணிபுரிந்தவர். திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் முதன்மை உறுப்பினர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

இவர்தம் மறைவு எழுத்துலகிற்கும் அன்பர்களுக்கும் பேரிழப்பாகும். "மக்கள் சிந்தனை" இவர்தம் இழப்பு குறித்து வருந்துகிறது. இவர்மறைவால் துயருரும் இவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு இவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

குன்றக்குடி அடிகளார்

கவிஞர். புதுகை வெற்றிவேலன்
(தலைவர், உலகத் திருக்குறள் பேரவை, செங்கல்பட்டு மாவட்டம்)

குன்றக்குடி அடிகளார் பெரியவர் பிறந்தநாள் (11.7.1925) இன்று இவர்தான் உலகத் திருக்குறள் பேரவை என்னும் அமைப்பை தொடங்கித் திருக்குறளை பட்டி தொட்டி எல்லாம் கொண்டு சேர்த்தவர். குன்றக்குடி அடிகள் (சூலை 11, 1925 ஏப்ரல் 15, 1995) சமயம், இலக்கியம், மட்டுமின்றி பேச்சுத்திறன், எழுத்துத்திறன், இசை போன்று பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் அரங்கநாதன். தருமபுரம் ஆதீனத்தில் பணியில் சேர்ந்த பொழுது அவர்கள் இவருக்கு இட்ட பெயர் கந்தசாமி தம்பிரான் பராமாச்சாரியர்.

குன்றக்குடி மகாசந்நிதாமாக பதவி ஏற்ற பொழுது இவருக்கு இட்ட பெயர் தெய்வசிகாமணி அருணாசலத் தேசிகப் பரமாச்சாரியார். நான்காம் வகுப்பு பயிலும் சிறுவனாக இருந்த போது வழக்கறிஞரும், தமிழ்ப் பேராசிரியருமான ரா.பி. சேதுப்பிள்ளையின் வீட்டில், அவரது அறையின் ஜன்னல் முன் நின்று தினம் ஒரு திருக்குறள் ஒப்பித்துக் காலணா பெறுவது அரங்கநாதனின் வழக்கம், இவ்வாறு அரங்கநாதனின் வாழ்வை உயர்த்திய திருக்குறள், பின்னாளில் அடிகளாரான அவருக்குப் பொதுநெறி ஆகியது. இதே போல, அரங்கநாதனின் பிஞ்சு உள்ளத்தில் தீண்டாமை விலக்கு உணர்வும், மனிதநேயப் பண்பும் குறிக்கோள்களாகப் பதியக் காரணமானவர் விபுலாநந்த அடிகள் ஆவார்.

இவர் ஒரு அற்புத துறவி

மற்ற மடாதிபதிகள் போல் பாலில் தேன் கலந்து பழத்தில் பஞ்சாமிர்தம் செய்து உண்டு களித்து ஊண் வளர்த்த துறவியல்லர்; மக்களைக் காணாமல் மடத்தில் படுத்துக்கொண்டு சுகம் அனுபவிக்கும் துறவி அல்லர்; காவிக்குள் தெய்வீகத்தையும் கருத்தில் பகுத்தறிவையும் கொண்ட அற்புதத் துறவி.

இந்தத் துறவி பல்லக்கில் ஏறிப் பவனி வந்தவர் அல்லர். தன்னந்தனியாகச் சேரிக்குள் சென்று தீண்டத் தகாதவர்கள் என்ற புறம்தள்ளப்பட்டவர்களைக் கண்டு அவர்களின் துன்பங்களைக் கேட்டு அவற்றைக் களைத்தவர். ஏழைமக்கள் சுயதொழில் செய்ய அரசு உதவிகள் அனைத்தும் பெற்றுத் தந்தவர்.

இவர் ஒரு புரட்சித் துறவி

மடாதிபதிகள் தங்களை இறைத் தூதுவர் என்று ஏசுநாதர் நிலையில் வைத்து மகிழ்வார்கள். இவர் அப்படி அல்லர். இறைமறுப்பும் பெரியாரின் உற்ற நண்பர் அண்ணாவிற்கு அருமைத்தோழர். கலைஞர்க்கும் அப்படியே தெய்வப்பணி என்பது மக்களின் சேவைப் பணியே என்பது இவரின் கொள்கை. மடத்திற்குள் சமபந்தி நடத்தி தீண்டத் தகாதவர்கள் என்று புறம்தள்ளப்பட்டவர்களை மடத்துக்குள் அழைத்து உயர்குலத்தாரோடு உணவருந்த வைத்தவர். மண்டைக்காடு சாதிக் கலவரத்தில் நவகாளிக் காந்தியாக மாறி கலவரப் பகுதிக்குள் நுழைந்து அமைதியை நிலைநாட்டியவர். மீனவக் குப்பங்களுக்குச் சென்று மீன்களைக் கையில் ஏந்தி ஏலம் விட்டு பெருந்தொகை சேர்த்து மீனவர்களுக்கு உதவியவர். மதுரையில் வைத்தியநாதர், மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் அரிசனங்களை அழைத்துச் செல்லும் பொழுது உடன்சென்றவர். இப்படிக் கண்மூடிப் பழக்கங்களை மண்மூடச் செய்த மடாதிபதி.

இவர் கேட்டார்ப் பிணிக்கப் பேசும் நற்றமிழ் நாவலர். இவர் மேலவை உறுப்பினராக இருந்தபொழுது திருக்குறளை தேசியமொழி ஆக்க வேண்டும் என்று மேலவையில் முழங்கியவர்.

எழுத்துப்பணி

"அ" சமய இலக்கியங்கள்
அப்பர் விருந்து
அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்
திருவாசகத்தேன்
தமிழமுது
சமய இலக்கியங்கள்
நாயன்மார் அடிச்சுவட்டில்
ஆலய சமுதாய மையங்கள் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்றது)
நமது நிலையில் சமயம் சமுதாயம்
திருவருட்சிந்தனை
தினசரி தியான நூல்
"ஆ" இலக்கியங்கள்
திருவள்ளுவர்
திருவள்ளுவர் காட்டும் அரசியல்
திருவள்ளுவர் காட்டும் அரசு

குறட்செல்வம்
வாக்காளர்களுக்கு வள்ளுவர் தொடர்பான அறிவுரை
திருக்குறள் பேசுகிறது
குறள்நூறு
சிலம்புநெறி
கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்
பாரதி யுத சந்தி
பாரதிதாசன் உலகம்
கவியரங்கில் அடிகளார் (கவிதைகள்)
மண்ணும் மனிதர்களும் (தன்வரலாறு)
"நாட்டுடமை ஆக்கப்பட்ட நூல்கள்"
இப்படி இவரின் சாதனைப் பட்டியல் நீளும்

துறவுக் கோலத்தில் தூயத் தமிழ் தொண்டராக சமுதாய பணியில் சமூக நீதிகாத்த சீலராக சமூகத்தைச் செதுக்கும் சிற்பியாக விளங்கித் துலங்கிய துறவிகளில் தூயமாமணியான குன்றக்குடி அடிகளார் பெரியவரின் வழிநடந்து அவரைப் போற்றுவோம்.


சினத்தை கொள்ளாதான் நோய் அறியான் :

இளமைப் பருவம் இயல்பாக தவறு செய்யும் தன்மை கொண்டது. இளமையில் ஐம்புலனை அடக்குபவன், எப்பொழுதும் தவறு செய்ய மாட்டான். அறிவுடையோர் வெறுக்கும் சொற்களை பேசமாட்டான். எக்காலத்திலும் சினம் கொண்டு இருப்பவன் அதிகமான நோய்களுக்கு ஆட்படுவான். சினத்துடன் இருப்பதால் இரத்த அழுத்தம் உடலில் அதிகரிக்கும். இதய நோய், ஹார்மோன் சார்ந்த நோய்கள் ஏற்படக்கூடும். சில நேரங்களில் அதிகமான சினத்துடன் உயர்ந்த குரலில் பேசுவதால் பதற்றம் ஏற்படும். ஆகையால் சினத்தோடு இருப்பது சிறுபான்மையாகும் என்கிறது திரிகடுகம். இதனை,

"இழுக்கல் இயல்பிற் றிறமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை யாண்டும்
செறுவொடு நிற்கும் சிறுமை இம்மூன்றும்
குறுகார் அறிவுடை யார்" (திரிகடுகம்-14)

நல்லாதனார் குறிப்பிடுகின்றார்.

முனைவர்.கூ. இராஜலெட்சுமி



கவிவேந்தர் கா. வேழவேந்தன்

பிறந்தநாள் வாழ்த்து

தமிழகத்தின் மூத்த மரபுக் கவிஞரும் 70 ஆண்டுகளுக்கு மேல் இடையறாமல் இன்று வரை அலுப்பும் சலிப்புமின்றித் தாய்த் தமிழுக்குத் தம் இனிய படைப்புகளால் தொண்டாற்றி வரும் முன்னாள் அமைச்சர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்கள் 5.5.2020 செவ்வாய்க்கிழமை அன்று தம் 85ஆம் வயதில் அடி எடுத்து வைத்துள்ளார். நம் இதழின் சார்பில் அப்பாவலர் பெருமகனுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் போற்றுதலையும் தெரிவிக்கின்றோம்.

5.5.2020 அன்று செவ்வாய் அன்றே மாலை 5.30 மணிக்கு சென்னை அண்ணாசாலை பழைய ஆனந்த் திரையரங்கம் அருகில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நடைபெற்ற அவர் தம் சீரிய படைப்பாற்றல் பற்றி பேராசிரியர் முனைவர் பா. வளன்அரசு அவர்கள் தீட்டிய கருத்தாய்வு நூலின் வெளியீட்டு விழாவும், கவிவேந்தரின் 85 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவும், நீதியரசர் டி.என்.வள்ளிநாயகம், நாவுக்கரசர் பேராசிரியர் சுப.வீ.ஆகியோர் பங்கேற்க எழுச்சியுடன் நடபெற்றது. தமிழ்ச்சுவைஞர் அனைவரும் கூடி மகிழ்வுடன் வாழ்த்துவோம்.

– ஆசிரியர்

கவிச்செம்மற் கில்லை இறப்பு

(தமிழாகரர் தெ. முருகசாமி)

கவிச்செம்மல் முத்துக்
கணேசனார் தானும்
புவிபுகழ் காரைக்
குடியில் - நவிலும்
ஒருபுள்ளி உத்தமராய்
ஊருலகம் போற்ற
இருந்தார்க் கிலையே
இறப்பு!

ஏனெனில் அம்மைக்குப் பல்லாண்டு பாடியே
ஏரார் பெருமாளின் கோவிலிலும் - ஏற்ற
நகரச் சிவனது கோயிலிலும் யாரும்
பகரப் பதிப்பித்தார் பார்த்து!

மற்றுமுள காரைநகர்
கோவிலின் சன்னிதியில்
பற்றுடன் மக்கள்தான்
பாடிட - உற்ற
கடவுளர்க் கேற்ற
கனிவான பாடல்
தடம்பதித்தார் தன்னார்வத்
தால்!

கோவிலூர் குன்றக் குடியாதீ னங்களின்
ஓவியமாய் ஆசி பலபெற்றார்! - பூவில்
நுகரும்தேன் வண்டாய் நலம்பொலிந்து வாழ்ந்தார்!
பகருமிரு ஆதீனத் தால்!

அரிமா கழக
அருந்தூணாய், ஆன்ற
உரிமை உவப்பாய்த்தன்
பேரில் - சரியான
* ஈரிடத்தில் நல்ல
அறக்கட் டளைஅமைத்தார்
ஈண்டவர்க்கு நீளும் புகழ்.

இலக்கிய நற்கழகம் என்கின்ற பேரில்
நலக்கினிய நூல்கள் நயந்தே - கலக்கமின்றித்
தாமாகப் பன்னூல் வெளியிட்டார்! தன்னிறைவைத்
தாம்பெற்றார் தாமே தனித்து!

அன்னார் வெளியீட்டில்
நல்முத்தொள் ளாயிரத்தின்
பொன்னார் உரைக்கில்லை
ஈடென்பேன்! - என்போலப்
போற்றிப் புகழப்
புலவர் படிப்பிற்கே
ஏற்றபாட நூலாச்சே
அன்று!

சீரார் சிவகங்கை சீல எழுத்தாளர்
பேரார்ந்த சங்கப் பரிசிற்குத் - தாரான
மாகவே தம்பெயரில் தந்தார்! தமிழ்ப்பாலைத்
தாகமாகத் தான்குடித்த தால்!

நன்றி !

நமது ஆதீனத்தின் உழுவலன்பரான “அறமனச்செம்மல்” திருமிகு. ஏ.ஆர். இராமசாமி அவர்கள் “மக்கள் சிந்தனை” இதழுக்குப் புரவலர் தொகையாக ரூ. 2500/- அனுப்பி உதவியிருக்கிறார். அப்பெருமகனார்க்கு “மக்கள் சிந்தனை”யின் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



“மக்கள் சிந்தனை”
அன்பர்களுக்கும்,
வாசகர்களுக்கும்
இனிய புத்தாண்டு / பொங்கல்
வாழ்த்துக்கள்

- ஆசிரியர்

அகர முதல எழுத்தெல்லாம் - உவமை விளக்கம் (புதிய சிந்தனை)

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப்புலவர்
(வித்துவான்.க. கதிரேசன் எம்.ஏ.,பி.எட்., பூவாளூர் - 621 712,
அலைபேசி : 9865193754)

குறிப்பு : பூவாளூர்ப் புராணஉரை - அறிமுக உரையின் விரிவு)

திருக்குறள் :

குலம், மொழி, மதம், நாடு என்ற எல்லைகளைக் கடந்து மனிதகுலம் அனைத்துக்கும் பொதுவான அறங்களைப் பேசுவதால் அது உலகப் பொதுமறை என்ற மீஉயர்நிலையினது. உலகம் அனைத்தும் போற்றும் மீஉயர் பரம்பொருளைத் தொடக்கத்தில் பரவும்போதும், அப்பொருளின் பண்புகளைக் குறிப்பிட்டே அதனைச் சுட்டிக்காட்டிப் போற்றுகிறது. பத்துக் குறட்பாக்களிலும் முறையே, ஆதிபகவன் - முழுமுதல் தலைவன், வாலறிவன் = தூய அறிவு உடையவன், மலர்மிசை ஏகினான் - நெஞ்சத் தாமரையில் அமர்கிறவன். வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமை இல்லாதான், அந்தணன் = பெருங்கருணையன், எண்குணத்தான், இறைவன் என்ற பெயர்களால் அவனைச் சுட்டுகிறது. இறைவன் என்பது - எங்கும் எதிலும் கலந்திருப்பவன் - என்ற பொருள் தரும் சொல்லாகும். இச்சொல்லாட்சி திருக்குறள் 5,10 ஆகியவற்றில் முறையே இடையிலும் இறுதியிலும் உள்ளபோதும் "என்றும் எதையும் கடந்திருப்பவன்" என்று பொருள்தரும் "கடவுள்" என்ற சொல்லை அதிகாரத் தலைப்பில் வைத்துக் கடவுள்வாழ்த்து என்ற தலைப்பு வந்தவிதம் அறிஞர்களின் ஆய்வுக்குரியது.

முதற்குறள்,

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்பது இக்குறட்பாவில் "அகர முதல எழுத்தெல்லாம்" என்பது உவமைப்பகுதி. ஆதி பகவன் முதற்றே உலகு என்பது பொருட்பகுதி. இதில் உவமையையும் பொருளையும் இணைக்கும் உவமஉருபு இன்மையாலும், தலைமை பற்றிய செய்தியாதலாலும் இக்குறட்பா தலைமை பற்றிவந்த எடுத்துக்காட்டுவமை என்பார் உரையாசிரியர் பரிமேலழகர்.

திருக்குறள், இறைவன் தன்மையை உணர்த்தக்காட்டும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்ற இந்த உவமையை இவர்க்குப் பின்வந்த

திருமுறை, திவ்வியப் பிரபந்தம், இடைக்கால மரபிலக்கியங்கள், பிற்கால மரபிலக்கியங்கள், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பெற்ற திரிசிராமலைக்கோவை முதலிய பற்பல இலக்கியங்கள் எடுத்தாண்டுள்ளமை ஒன்றே இவ்வுவமையின் பெருஞ்சிறப்பினை நமக்கு உணர்த்தும்.

தமிழ் எழுத்துக்களைத் தனியே ஒலிக்க முற்படும்போது, கேட்பவர் அவ்வெழுத்து குறிலா, நெடிலா, பிறவா என்பதை எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவாறு அமைவன கரம், காரம், கான் என்ற சாரியைகள். எனவே இவற்றை எழுத்துச் சாரியைகள் என்பது மரபு. "அ" என்பதுடன் கரம் என்ற சாரியை வந்துள்ளதால் "அ" என்பது எழுத்தையே குறிக்கிறது என்பதும்; அதனுடன் இங்கு தொடர்புபடுத்தப்பெறுவன அனைத்தும் எழுத்துக்களே என்பது "எழுத்துஎல்லாம்" என்பதாலும் புலப்படும். மேலும், உவமையுடன் பொருத்திப் பார்க்க வேண்டுவன முழுமுதல் தலைவன் என்பதும் உலகம் என்பதும் புலப்படும். அகரம் – அ என்ற ஒற்றை எழுத்துடன், ஆதிபகவன் என்ற தனிஒருவனையும், மிகப்பல எழுத்துக்களுடன் உலகின் மிகப்பல உயிர்க்குலத்தையும் ஒப்பிட்டு நோக்குவோம்.

அகரமும் ஆதிபகவனும்

அகரம், பிறஎழுத்துக்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நின்று, அவற்றை முறையே நிலைக்கச்செய்தல், செலுத்துதல், அறியச் செய்தல் ஆகிய நிலைகளில் உதவுகிறது. அதுபோல இறைவன் உலகுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நின்று; முறையே நிலைக்கச் செய்தல், செலுத்துதல், கண்டுகாட்டி அறியச் செய்தல் ஆகிய நிலைகளில் அருள்புரிகிறான். இதனைச் சிவஞானபோதம் சூ, எண் 2, "அவையே தானேயாய்" என்று சுருங்கக் கூறுவதை, மாதவச் சிவஞானமுனிவர் "அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்" என்று விரித்து – ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கின்ற அவனது தன்மையை விளக்குகிறார். அகரம் பிறஎழுத்துக்களுடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் தன்மை காரணமாக இறைவனுக்கு உவமையாகக் கூறப்பெறுகிறது.

அகரம் முதலான அனைத்து எழுத்துக்களும் இருவகை வடிவங்களில் அமைபவை. அவை ஒலிவடிவம், வரிவடிவம் என்பதை அனைவரும் அறிவர்.

இத்திருக்குறட்பா தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமையணி ஆதலின், அவ்வழியே சடமாகிய – அறிவுஇல்லாததாகிய

அகரம், சத்துப்பொருளாகிய – வாலறிவனாகிய முதல்வன் இடையே உள்ள ஒற்றுமைகளைக் காண்போம்.

தலைமைப்பண்புகளுள் சில :

பிறர்உதவி இன்மை, பிறவற்றை / பிறரை இயக்கும் ஆற்றல், அனைத்துக்கும் / அனைவர்க்கும் ஆன பொதுத்தன்மை ஆகிய மூன்றினை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம். (சடப்பொருளாகிய ஞாயிறு இத்தகு தலைமைப்பண்புக்கு ஓரெடுத்துக்காட்டு எனலாம்).

எழுத்துக்களை நாம்ஒலிக்க :

அகரம் இயல்பான வாய்திறத்தல் ஆகிய அங்காப்பில் தோன்றுவது. அங்காப்பின்றி எவ்வெழுத்தையும் ஒலிக்கவியலாது. பிற எல்லா எழுத்துக்களையும் ஒலிப்பதற்கு, ஓர்எழுத்தை ஒலிக்கவேண்டும் என்ற நினைவுடன் கூடிய இயல்பான அங்காப்பு – வாய்திறத்தலுடன் : அவ்வெழுத்தை ஒலிப்பதற்கு உரியவாறு இதழ், பல், நா, அண்ணம் (மேல்வாய்) ஆகியவற்றின் தக்க முயற்சி – உதவி இன்றியமையாதது.

அகரமும், இறைவனும் முறையே எழுத்துக்களுடனும் உலகுடனும் ஒன்றாய் விளங்குதல் :

அகரம், ஒலிவடிவு கொள்ளும்போது இயல்பான அங்காப்பு – வாய்திறத்தல் மூலம் ஒலிவடிவு கொள்கிறது. பிறஎழுத்துக்களை ஒலிக்க, அகரத்தை ஒலிப்பதற்குரிய அங்காப்புடன், பிறஎழுத்துக்களை ஒலிப்பதற்கு உரியவாறு இதழ், பல், நா, அண்ணம் ஆகியவற்றின் உதவி இன்றியமையாதது. வாய்திறத்தல் மூலம் அமையும் அகரஒலி, பிறஎழுத்துக்குரிய ஒலியின் வேறாகாது, அதனுடன் ஒன்றுபட்டு, அவ்வெழுத்தின் ஒலிக்கு முன்னே தெற்றெனப் புலப்படாது நிற்கின்றது.

இறைவன் "தான்தோன்றி" அவனைத் தோற்றுவித்தார் இல்லை. அவனது அருளாற்றலே தெற்றெனப் புலப்படாது முன்னின்று உலகப் பொருள்களை இயக்குகிறது.

பிறபதினொரு உயிர்எழுத்துகட்கும் பிறஅனைத்து எழுத்துகட்கும் முதலில் நிற்கும் பொதுஒலியாய் அகரம் விளங்குவதுபோல், இறைவன் அண்டபிண்டம் அனைத்துக்கும் முதற்பொருளாய் – பொதுவனாக முன்னிற்கிறான்.

- அகரம் = இறைவன்; வாய்திறத்தலால் இயல்பாக அமையும்; அகர ஒலி = இறைவனது அருளாற்றல். பிறஎழுத்துக்களுடன் ஒன்றுபட்டு நிற்கும் அகரஒலியைத் தனித்துக் காணவியலாது. பிறஎழுத்து ஒலியுடன் அதுஒன்றுபட்டு ஒலிப்பதன்மூலமே உணரமுடியும் =

இறைவனின் அருளாற்றலைத் தனித்துக் காணவியலாது. உலகப் பொருள்களின் மூலமே உணரவியலும்.

- அகரஒலி பிற அனைத்து எழுத்துகட்கும் பொது = இறைவன் உலகம் அனைத்தும் பொதுவானவன்.
- அகரம் பிறஎழுத்துக்களுடன் ஒன்றாய் நின்று அவற்றை நிலைக்கச் செய்கிறது = இறைவன் உலகுடன் ஒன்றாய் நின்று உலகை நிலைக்கச் செய்கிறான்.
- அகரத்தின் அங்காப்புக் கூறுஇன்றேல் பிறஎழுத்துக்கள் இல்லை = இறைவனின் அருளாற்றல் இன்றேல் உலகு இல்லை.

இக்காரணங்களால் அகரமும் இறைவனும் முறையே பிறஎழுத்துக்களுடனும் உலகுடனும் ஒன்றாய் நின்று அவற்றை நிலைக்கச் செய்தலை அறியலாம்.

அகரம் பிற எழுத்துக்களுடனும், இறைவன் உலகுடனும் உடனாய் விளங்குதல்

அகரம் வரிவடிவை ஏற்கும்போது, அகரஎழுத்து, சுழி, வளைகோடு, கிடைக்கோடு, குத்துக்கோடு ஆகியவற்றின் சரியான அமைவால் உருவாகிறது. இந்நால்வகைக் கோடுகளின் சீரான அமைவால்தான் அனைத்து எழுத்துகளும் அமைகின்றன (அகரத்தின் சுழி, மெய்யெழுத்துக்களின் புள்ளியாகவும் அமைகிறது).

அண்டம், பிண்டம் ஆகியவற்றின் அமைவுக்கு ஆதிபகவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலே காரணம்.

அகரம் பிற எழுத்துக்களின் வேறுபட்டு விளங்குவதுபோல், இறைவன் உலகின் வேறுபட்டு விளங்குதல்

அகரம் தனது ஒலிவடிவையும் வரிவடிவையும்

- பிற உயிரெழுத்து
- மெய்எழுத்து,
- சார்பு எழுத்துகள் ஆகிய
  - உயிர்மெய்
  - ஆய்தம்
  - உயிரளபெடை
  - ஒற்றளபெடை
  - குற்றியலிகரம்

- குற்றியலுகரம்
- ஐகாரக்குறுக்கம்
- ஔகாரக்குறுக்கம்
- மகரக்குறுக்கம்
- ஆய்தக்குறுக்கம்

ஆகிய அனைத்து எழுத்துகட்கும் வழங்கியபோதிலும் தன்ஒலிவடிவிலோ வரிவடிவிலோ எவ்வித வேறுபாடும் இன்றித் தன்முழுமையான நிலையில் அணுவளவும் மாறாது அமைகிறது.

அதுபோல இறைவன், தனது அருளாற்றலை ஒன்றுமுதல் ஆறுஈறான அறிவுஉடைய உயிரினங்கட்கும், சடப்பொருளாகிய அறிவில்லாத பொருள்களுக்கும் வழங்கியபோதிலும், தனது ஞானவடிவிலோ,

- தன்வயத்தனாதல்
- தூயஉடம்பினனாதல்
- இயற்கை உணர்வினன் ஆதல்
- முற்றும் உணர்தல்
- இயல்பாகவே பாசத்தின்நீங்குதல்
- பேரருள்உடைமை
- முடிவுஇல் ஆற்றல்உடைமை
- வரம்புஇல் இன்பமுடைமை

ஆகிய எண்குணநிலையிலோ அணுஅளவும் மாறாதவன்.

இங்ஙனம் இறைவனுடன் அகரம் ஒத்துவிளங்குவதால்தான், திருவள்ளுவர் முதல் அனைத்துப் பெருமக்களும் கண்ணால் காணவியலாத இறைவனின் இயல்புக்கு, கண்டும் உணரும் தன்மையுடைய அகரத்தினை உவமையாகக்கூறி விளக்கி வருகின்றனர்.

முடிப்பு :

இங்ஙனம் பல்வேறு தன்மைகளில் சடப்பொருள் ஆகிய அகரமும், சத்துப்பொருள் ஆகிய ஆதிபகவனாகிய இறைவனும் முறையே பிறஎழுத்துக்களுடனும், உலகுடனும், ஒன்றாய் வேறாய் உடனாய் விளங்குவதால் திருவள்ளுவர் இவற்றை உவமையும் பொருளும் ஆக்கிக் "காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை" = கண்ணால் காணப்பெறும் உலகத்தைக் காணப்பெறாத கடவுட்கு உவ்மை கூறினார்.

இக்கட்டுரை ஆசிரியரின் பிறகட்டுரைகள் தொடர்ந்து கூகுளில் வெளிவரும் - ஆசிரிர்

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்

திருப்பெருந்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகட்குக் க.கதிரேசன் வணக்கங்கள் பற்பல.

நம் மக்கள் சிந்தனை கார்த்திகை – மாசி இதழ் கிடைத்தது. மிக்க மிகழ்ச்சி. சமுகத்தின் அமெரிக்கப் பயணக் கட்டுரை எண் 2. அதில் :

பிரிட்டிஷ் வைஸ்சிராய் இர்வின் பிரபுவுடனான ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் முன் அண்ணல் காந்தியடிகள் தன் ஆடையில் வைத்திருந்த உப்பினை எடுத்துத் தேநீரில் கலந்துகொண்டே கண்களைச் சிமிட்டியபடி "இதுதான் பாஸ்டன் தேநீர் விருந்து" என்று சொன்ன துணிச்சல் எங்கே? இன்றைய நம் நிலை எங்கே?

அமெரிக்க மக்களின் தேசபக்தியை அவர்களின் வரலாற்றுப் பெட்டகத்தின் மூலம் அறிந்து கொள்ளும் நாம், நம் தமிழர் வரலாற்றுப் பெட்டகத்தை வடிவமைத்துள்ளோமா? நம் அடுத்த தலைமுறைக்கு உதவுமாறு நிலைப்படுத்தியிருக்கிறோமா? என்ற உணர்வு மேலிடுகிறது.

கட்டுரையின் நிறைவில் அணணல் காந்தியடிகளின் வாழ்வினைச் சுட்டிக்காட்டி அவ்வழியில் நாம் பயணிக்க வேண்டிய நிலையை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளது நம் வாழ்விற்குரியது.

தமிழாகரர் தெ. முருகசாமி ஐயா அவர்களின் தொடர் கட்டுரை சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – 13 ஆழமான நுட்பமான சிந்தனையின் ஊற்று.

ஞானாமிர்தசாரம் – உரைவேந்தர்.ஔவை.சு. அவர்களின் குன்றக்குடி கருத்தரங்கச் சொற்பொழிவு தொடர் கட்டுரை "அறியாதோரையும் அறியக் காட்டும்" நுட்பமுடையது.

தருமையாதீனப்புலவர் தா. குருசாமி தேசிகர் அவர்கள் தொடர்ந்து எழுதிவரும் கட்டுரைகள் அருமைப்பாடுடையன.

அருமை நண்பர்கள் "அனிச்ச அடி" காப்பியக்கவிஞர், "கவிஞர்கோ" அண்ணன் ஆ. பழநி அவர்களின் மறைவும், "பொற்கிழிக்கவிஞர்" "கவிஞர்கோ" நா. மீனவன் அவர்கள் மறைவும் நண்பர்கள் அனைவரின் உள்ளத்தையும் பெருந்துயரில் ஆழ்த்துவன. அவர்கள் ஆன்மா குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான்

திருவடிநிழலாகிய இன்ப அன்பில் திளைக்க இப்பெருமானை இறைஞ்சுகிறேன்.
– க. கதிரேசன், பூவாளூர்

திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களுக்குத் திருவள்ளுவர் கல்லூரிப் பேராசிரியர் சக்திவேலு அன்புடனும் பணிவுடனும் எழுதிக் கொள்ளும் மடல் யாதெனில் தாங்கள் எல்லா வளமும் நலமும் பெற்று 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ எல்லாம் வல்ல இறைவன் குன்றக்குடி முருகப் பெருமான் அருள்புரிய வேண்டிக் கொள்கிறேன்.

நான் தங்களைத் தங்களுடைய சன்னிதானத்தில் சந்தித்துத் தங்களின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டதில் பெரு மகிழ்ச்சி. அதுசமயம் தாங்கள் சிறப்பாசிரியராக இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் "மக்கள் சிந்தனை" இதழ்கள் இரண்டினை என்னிடம் தந்து தங்களின் அமெரிக்கப் பயண சிறப்புக் கட்டுரையை என்னைப் படிக்கும்படி கேட்டுக்கொண்டீர்கள்.

கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன். கட்டுரை முழுக்க தேசப்பிதா மகாத்மா காந்தியின் ஆன்மீகச் சிந்தனை, மனிதநேயம், எளிமை, அகிம்சை பற்றியும், ஆபிரகாம்லிங்கன் கறுப்பர் இன மக்களுக்கு உண்மையான ஜனநாயகத்தை வழங்க அவர் செய்த தியாகங்கள் பற்றியும், அவரின் வழியிலும் செயல்பட்ட மார்ட்டின் லூதர் கிங் பற்றியும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு. கென்னடி பற்றியும், பேரறிஞர் அண்ணா பாராளுமன்றத்தில் தமிழ்மொழி ஆட்சிமொழியாக ஆக வேண்டும் என்பதற்காக அவர் ஆற்றிய உரை பற்றியும் உங்களுக்கு அமெரிக்கத் தமிழ்ப்பெருங்குடி மக்கள் தங்களின் மனிதநேயப் பணிகளைப் பாராட்டி "மாட்சிமை விருது" என்ற உயரிய விருதை, அவர்கள் வழங்கிய போது தாங்கள் ஆற்றிய உரையும் – கல்வெட்டுகளில் பொறிக்கப்படவேண்டிய ஒன்று. நன்றி.

– சு. சக்திவேலு, சிவகிரி

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி



குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கல்வி அறக்கட்டளை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு

தொழிற் பயிற்சி மையம் (ITI & IS)

(மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

குன்றக்குடி - 630 206



மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்

தொழிற்பிரிவுகள்	பயிற்சிக்காலம்	குறைந்தபட்ச கல்வித்தகுதி
1. MMV – மெக்கானிக் (மோட்டார் வெகிக்கிள்)	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
2. EM – எலக்ட்ரானிக் மெக்கானிக்	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
3. COPA - கம்ப்யூட்டர் ஆபரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டெண்ட்	1 ஆண்டு	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
மாநில அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்		
4. A.C. – மெக்கானிக்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி
5. E.T. எலக்ட்ரிகல் டெக்னீசியன்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி

★ வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு. ★ பயிற்சி முடிந்ததும் வேலை வாய்ப்பு, அப்ரண்டிஸ் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

★ SC/ST மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை பெற்றுத் தரப்படும்.

★ பயிற்சியின்போது புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு அனுப்பி (IN PLANT TRAINING) பயிற்சி அளிக்கப்படும்.

★ குறைந்த இடங்களே உள்ளன. விரைவில் சேர்ந்து பயனடைவீர்

மேலும் விவரங்களுக்கு,

முதல்வர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற்பயிற்சி மையம்

குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்

☎ : (04577) - 264287, 264457, செல் : 9047325066, 9790543657, 9791930669



குன்றக்குடி கிராமப் பணியாளர்களுக்கு
10 கிலோ அரிசி, ரூ.1000 ரொக்கம் வழங்கியது.



9-4-2020 அன்று குன்றக்குடியில் கல்லல்
ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் கிருமிநாசினி தெளிக்கும்
பணியினை தொடங்கி வைத்தல்

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Dec2020-Jan2021

Price Rs. 8-00
Date of Publication 30-12-2020



5-4-2020 இரவு 9.00 மணிக்கு கொரோனாவுக்கு எதிரான மக்கள் சக்தியின் ஒற்றுமையை காட்ட, குன்றக்குடி ஆதீனத்தில் ஏற்றிய விளக்குகளின் ஒளி.

பெறுநர்

திரு

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி



அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166